Vol.23 | No. 11 | November 2019
The Official Organ of the Diocese of Thuckalay



# இறையருள்

## 2019 OCTOBER 20
## PRIEST'S RETREAT - SANGAMAM








2019 OCTOBER 27
MANJALUMOODU
PRESBYTERY BLESSING




2019 SEPTEMBER 29
FUNERAL OF
SR. MARIA FCC

JUBILEE OF CMC SISTERS
PILANKARAI



THE OFFICIAL ORGAN OF THE DIOCESE OF THUCKALAY
VOLUME 23 No :11 NOVEMBER 2019



# இறையருள்
# IRAIARUL

## உள்ளே...


| | |
|---|---|
| Bishop's Message | 02 |
| Mother Mariamma FCC | 07 |
| ஆயர் திருமுகம் | 10 |
| மறைக்கல்வி | 17 |
| இளையோர் இயக்கம் | 20 |
| மிஷன் லீக் | 21 |
| குழந்தை ஈசோ இயக்கம் | 22 |
| இல்வாழ்வு இயக்கம் | 23 |
| வின்சென்ட் தே பவுல் | 24 |
| சமூக சேவை சங்கம் | 26 |
| கல்விப்பணி | 29 |
| அருட்சகோதரர்களிடமிருந்து | 31 |
| மறைவட்டச் செய்திகள் | 32 |
| செங்கோட்டை செய்திகள் | 35 |
| Bishop's Engagements | 39 |
| Birthdays & Feastdays | 40 |


*Editorial Board*

Patron
His Excellency
**Mar George Rajendran SDB**
Chief Editor
**Fr. Joseph Santhosh**
Executive Editor
**Mr. Soundara Raj**
Associate Editors
**Fr. Thomas Sathianesan**
**Mr. Edwinson**
**Mr. Berlin Athencod**

Published by:
**Fr. Joseph Santhosh**
**Bishop's House**
**Post Box No . 12**
**Thuckalay - 629 175**
**K.K.Dist,Tamil Nadu,India.**
Designed by:
**Jesin**
Printed at
**Pulari Offset Press**
**Thuckalay**
**Ph:04651-252570**

Bishop George Rajendran SDB
Diocese of Thuckalay

Mobile: +919443261100
Email: bpgeorgerajendran@gmail.com

BISHOP'S HOUSE
P.B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari District
Tamilnadu – 629175, India
Phone: +91-4651-250633
Diocese Email: thuckalaydiocese@yahoo.com

**REF. NO. PRIESTS/GR/100/2019**

**31 OCTOBER 2019**

**DEAR AND REV. FATHERS,**

**GREETINGS FROM BISHOP'S HOUSE, THUCKALAY**

In this circular, I want to present to you a brief summary of the letter that our Holy Father wrote to all the priests on 4 August 2019, in observance of the one-hundred sixtieth anniversary of the death of Saint John Maria Vianney. In fact, Pope Francis issued an unexpected but affectionate letter to his children and brother priests throughout the Church.

The letter was another surprise from the Pope who, in the words of the Prefect of his Household, Archbishop Georg Gänswein, "is a person who surprises and welcomes surprises." For a Pope most known for constructively criticizing his priests, the letter is a welcomed suspension of previous comments. It comes as blessed relief, a letter of paternal reassurance and fraternal charity.

Pope Francis begins the letter: "As an older brother and a father, I too would like in this letter to thank you in the name of the Holy and Faithful People of God for all that you do for them, and encourage you…"

After the initial introduction, which provides an outline for the letter, Pope Francis moves into a summary of the pain caused by the current crises, then to words of gratitude, followed by a message of encouragement, and then concludes with Praise for the Blessed

Mother, who is hailed as an Example and Model for Priests and for the Church.

In the first part of the letter, the Pontiff acknowledges the current crises in the Church and the pain they have caused believers and society. He also addresses the suffering of good priests, grieving for the priests whose own faith has been scandalized by the abuse and cover-ups, who are also thrown into an environment of suspicion by people of goodwill, and who have had their own pastoral ministries limited by the questioning and hesitation of others because of the crises.

In these acknowledgments, the Pope proves to be a watchful shepherd, since many good priests - along with their people - have been shocked, hurt, and confused by the scandals and cover-ups.

After addressing the pain caused by the scandals, Pope Francis moves to words of gratitude. He affirms the selfless and dedicated service of the vast majority of priests, who seek to reflect the love and mercy of God to the people entrusted to their care. He expresses thanks for their tireless efforts and constant compassion to others.

These words are followed by a message that is self-described as "encouragement," but which is more of an exhortation and paternal correction. In this section of the letter, Pope Francis again displays his concern for the spiritual health of his priests. While his words ring true, they seem misplaced in the intention of the letter.

At times, it appears as if the Pope is expressing a disapproval of the life of hard-working priests. However accurate (or not) these words might be, they appear out of place in the letter, especially following such strong words of gratitude. Perhaps the best explanation that can be given to the exhortatory words is that the Pope truly wants

humble, poor, and people-oriented priests and, in spite of any context, he has to emphasize these essentials.

Overall, the letter demonstrates much of the heart and spirit of Pope Francis. The recent book, The Other Francis: Everything They Did Not Tell You About the Pope by Deborah Castellano Lubov, reveals the inner life and convictions of Pope Francis by way of multiple interviews with people who have known him for years or who have worked with him.

The quote above from Gänswein is taken from the book, as if this quote from the Pontiff's sister: "He was always joyful and supported me, as it is right for an older brother to do."

In many respects, the book serves as an interior preamble to the writings of Pope Francis. The book intricately guides people (including myself) to understand who the Pope is, what makes him tick, and from what personal world view he is speaking. The book is a valuable resource for understanding  Pope Fracis' letter to Priests.

After his encouragement, the Pontiff's letter comes to an abrupt conclusion. He moves to praising the Virgin Mary and wraps up the letter. It seems something is missing. Where is repentance? Although very briefly mentioned in the first section on pain, the repentance stated there is removed from personal accountability.

And, truth be told, the letter would have been much stronger and more credible if there had been an apology or some form of repentance by the Pope. The Pontiff has apologized before, in terms of the affairs in Chile and with the mismanagement and leaks in the Roman Curia, and so it would not have been out of character.

By not having some form of strong and robust repentance, which is central to our Christian faith, the letter is weak and less effective in giving inspiration and authentic encouragement to the countless

faithful priests who love, work hard, and have to regularly apologize for the scandals and for the state of the Church today.

During our meeting with Pope Francis during the Ad Limina Visit, he recalled this letter that he wrote to all the priests in the month of August 2019 and then spoke about the four types of relationships that every priest must cultivate in his life. He spoke about the relationship with God, with Bishop, with Priests and with the People of God.

In order to cultivate closer relationship with God, the Holy Father suggested that the priests must spend more time in prayer and in adoration before the Blessed Sacrament. He also insisted that they must celebrate the Sacraments with greater devotion so that they can come nearer to God.

Regarding the relationship with Bishop, the Holy Father stressed that the priests must be close to their bishop and the bishop must be close to his priests. Whenever the relationship between priests and bishop is strained, the pastoral effectiveness suffers. He asked the bishops that they should do everything possible to keep up the closeness with their priests. The priests, on their part, must obey and respect their bishops.

The third type of relationship that the Holy Father spoke is closeness among priests. There should be no groups based on ethnicity and there is no room for party politics among the priests. All the priests form a communion with their bishop. The Holy Father pointed out some of the dangers that the celibate priests can fall into – gossiping, constant complaining, finding faults with one another, etc. The priests should not hide from one another. Instead, they must experience unity among them. As one presbyterium, they must meet together as often as possible with the bishop.

Finally, the Holy Father said that the priests must be close to their people. They should not consider themselves superior and feel different from them. After all, they came from the people of God. St. Paul, in his Letter to Timothy insisted that he should preserve the grace of Ordination and obey his elders.

I am sure you will find some time to read the full text of the letter of Pope Francis to the priests and to reflect upon the four-fold relationships that he spoke to the Syro-Malabar Bishops as a message for the priests. The annual retreats, monthly priests' conferences and various celebrations are occasions for us to strengthen our communion with one another.

**CONCLUSION**

The month of October is coming to an end. I am sure you have fruitfully spent this month dedicated to the Holy Rosary by praying the Rosary and by meditating on the great mysteries of our salvation. All these will help us to come closer to Jesus, her Son. It was also the extra-ordinary month of the mission. It was an opportunity for reflection, prayer and support for the missionary efforts of individuals, communities and whole Church. With the celebration of the 23rd Diocesan Day drawing near, let us now redouble our efforts at building up the kingdom of God with greater commitment and fervour.

With my prayers and blessings,

Yours in Christ Jesus,

+ George Rajendran SDB
Bishop of Thuckalay



October 2, 2019

**EPARCHY OF THUCKALAY**

Dear and Rev. Sr. Ancilin FCC, the provincial and the beloved sisters of FCC Thuckalay San Joe Province, my dear brothers and sistster.
It was on 29th Sept. by 6.00 am in European time, I received the news of apssing away of our dear Mother Mariamma FCC... I remember visiting and praying for her before I left for Rome. I feel extreemly sad that I am not around Mariamma to bid farewell to her but at the same time my heart and mind are here with you all and praying for the departed soul. It was almost three years that Mariamma was bed ridden and was preparing spiritually for a happy death; we all of had ample oppertunities to come around her to pray for her and pray with her. Though we feel sad, lets trust in words of our Lord "Therefore you too have grief now; but I will see you again, and your heart will rejoice, and no one will take your joy away from you (John 16:22).
I would dare to say that anyone who ever met and engaged with Mariamma never forget her. The first words that come to me at the mention of Mother's name are loving, spirited, determined, courageous, generous, caring, motherly, in love with her vocation and the Congregation, grateful. The lord raised her to many honorable positions in the congregations; all these posittions made her humble and put her heart and soul at the service of her sisters and people of God.

## LOVE FOR THE CONGREGATION AND DIOCESE

Mother Mariamma had a great love for the Congregation. She lived the fransciscan sprituality to the full and wanted her sisters to do so. She let others know the love of God through here every movement

and intervention. She had love for Thuckalay mission and worked hard to raise the FCC region into a province, for this she made many trips to Changanaserry to convince the young sisters to come to the missions. Mariamma is fondly remembered by her sister as 'Patreness of Travellers' and she never misses any opportunity to visit sisters' homes in Kerala and attend any function at any time.
Mariamma loved Eparchy of Thuckalay and had great respect for the bishop and priests. She approached them with freedom and sincerity.

## VOCATIONIST

Mother Mariamma loved her vocation as a Clarist nun and wanted to share it with as many young women as possible. She never lost an opportunity to invite a young woman to come and see what our life is and to consider the possibility of giving her life to Christ. It's amazing how many sisters have shared with me saying that Mariamma played an important part in their vocation, either because she extended the initial invitation to consider the religious life or because she displayed such joy in her own religious vocation.

## PIETY

Mother Mariamma was a woman of prayer. Whenever anyone visited her they would always find here in the chapel praying to the Lord and invted others to pray with her. She would do this often. At one point, she told me and encouraged me to "put all the worries and concerns to the lord he will take care of the diocese".
While she was ailing, once when I asked if she was in pain, she nodded and said, "do I not need something to give to Jesus."

## GENEROCITY

Mariamma never thought of saving money for the future of the congregation but rather made use them well for the greater glory of God, be it for the Sisters, province or for the people of God in the diocese. Her heart was large enough to accept anyone who comes to her. All those who visited her would never go empty handed; she had some-

thing to give them. She could be called 'mother of poor'. Mother had a soft corner for the diocese of Thuckalay and would generously give to me and would force me to accept saying…. "This is not for you but for the diocese." One can't defeat her hospitality… Even in her sick bed she would make sure and tell the sisters to give food. Many sisters tried to copy this virtue of Mariamma but I dont think that they have fully imbibled this quality.

**GRATEFUL**

Mariamma was an ever grateful mother, whever she received a visit or a favour from any one she acknowledged her gratefulness…. She was wonderful benefactor of the diocese; when ever she finds good and generous friends, she would recommend and introduce them to me. They are today sponsoring the seminarians and educations of poor childrend in the diocese. I remember, when she was active she by herself would collect the money annually and bring to me. I remember gratefully visiting some of the benefactors with her at Kottayam and Changanassery.

**CONCLUSION**

Dear Mariamma I on behalf of the diocese I express my gratefulness to God for giving such a wonderful soul to the Church through you; we experienced the love of God more closely. The priests, faithful, your sisters pray lovingly and gratefully for you and commend you to the God you dedicated your life to, the God who is Father and Mother, to Jesus Master, the Lord and Love of your life. May our Triune God, Mary our Mother, St. Thomas and all the saints, blessed and vernerables of Syro-Malabar Family in heaven welcome you. We know you won't forget to intercede for us that we get good tickets to heaven. We love you and thank you.

With my prayers and blessings,

Yours in Christ Jesus,

+ George Rajendran SDB
Bishop of Thuckalay

# ஆயர் திருமுகம்

**Bishop George Rajendran sdb**
Diocese of Thuckalay

*Pastoral Letter No/GR/42/2019*

**ஆயர் திருமுகம்**

**இயேசு மெசியாவில்
அன்பிற்குரிய அருட்தந்தையரே!
அருட்சகோதரிகளே! அன்பு
இறைமக்களே! நம் தந்தையாம்
கடவுளிடமிருந்தும், ஆண்டவராம்
இயேசு மெசியாவிடமிருந்தும்
அமைதியும் அருளும் உரித்தாகுக!**

தக்கலை மறைமாவட்டம் தொடங்கப்பட்டதன் வெள்ளிவிழாவை 2021 ஆம் ஆண்டில் அனுசரிக்க இருக்கிறோம். இவ்விழாவை ஆன்மீக எழுச்சியின் விழாவாகக் கொண்டாடுதல் இறைத்திருவுளமாக இருக்கும். 'என்னைப் பின்பற்றி வாருங்கள்... நான் உங்களை மனிதரைப் பிடிப்பவர்களாக மாற்றுவேன்' (லூக் 5:10) என்னும் இயேசுவின் அழைப்பை ஏற்று திருத்தூதர் மார்த்தோமா இந்தியா வந்தடைந்தார். துணிவுமிக்க அத்திருத்தூதரிடமிருந்து விசுவாசத்தை ஏற்று பல கிறிஸ்தவ சமூகங்கள் உருவாகின. அவ்விசுவாசத்தின் சுடர் 1960 ஆம் ஆண்டில் சங்னாச்சேரி உயர் மறைமாவட்ட திருத்தொண்டுப் பணியாளர்கள் வழியாக குமரி மண்ணை வந்தடைந்தது. அர்ப்பணமிக்க அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள் மற்றும் பொதுநிலையினரின் முயற்சியால் குமரி மண்ணின் பல்வேறு பகுதிகளில் விசுவாச சமூகங்கள் உருவாகின. பின்னர் 1996 ஆம் ஆண்டு, அது மறைமாவட்டமாக உயர்த்தப்பட்டது. மறைமாவட்டமாக உயர்த்தப்பட்டதன் பின் பல்வேறு தளங்களில் வளர்ச்சியைக் கண்டது. இறைமக்களின் விசுவாச வளர்ச்சியின் கனிகளாக குருத்துவம் மற்றும் துறவற வாழ்விற்கான இறையழைத்தல்களும் உருவாகின. இவ்வளர்ச்சியின் தொடர்ச்சியாக திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் 2017 ஆம் ஆண்டு மறைமாவட்டத்தின் எல்லையை தமிழகத்தின் 7 மாவட்டங்களுக்கு விரிவாக்கம் செய்தார்.

"இந்த ஆண்டு யூபிலி ஆண்டு; அது உங்களுக்கு தூயது" (லேவி 25:12) என்று யூபிலியைக் கொண்டாட கடவுள் இஸ்ரயேல் மக்களுக்குப் பணித்தார். நமது மறைமாவட்டமும், அதன் உருவாக்கத்தின் வெள்ளிவிழாவை அனுசரிக்க வேண்டியது கடவுளின் அழைப்பாக

உள்ளது. அருள்பொழிந்து, ஆன்மீக வாழ்வில் உயர்வைத் தந்து, வளர்த்திய ஆண்டவருக்கு நன்றி செலுத்தும் ஆண்டாக இது அமைய ஆண்டவர் விரும்புகிறார். "நன்றி பலிகளை அவர்கள் செலுத்துவார்களாக. அக்களிப்போடு அவர்தம் செயல்களை புகழ்ந்தேத்துவார்களாக" (திபா 107:22) என்பது நம் இதயத்தின் பாடலாக இவ் யூபிலி ஆண்டில் அமையட்டும். அத்தோடு ஆன்மீக எழுச்சியின் ஆண்டாக இதை மாற்றவும் ஆண்டவர் விரும்புகிறார். அதற்காக நாம் 'ஆழத்தில் வலை போடுங்கள்' என்னும் இயேசுவின் வார்த்தைகளை மையக்கருத்தாக எடுத்துள்ளோம். இவ் இறைவார்த்தை இருவேறு அழைப்புகளை முன்வைக்கிறது. முதலாவதாக, நம்பிக்கையில் ஆழப்படுதல், இரண்டாவதாக நற்செய்தியின் சாட்சிகளாக மாறுதல். இவ்விரு அழைப்புகளுக்கும் பதிலுரைக்கும் வண்ணம் யூபிலி கொண்டாட இருக்கிறோம். இந்த ஈராண்டு கால கொண்டாட்டத்தின் வேளையில் இவ்விரு நோக்கங்களையும் எவ்வாறு நடைமுறைக்குக் கொண்டு வரலாம் என்பதை விவிலியம் வழி நின்று காண்போம்.

'ஆழத்தில் வலை போடுங்கள்' - DUC IN ALTUM – என்னும் வார்த்தையை இயேசு, முதல் சீடர்களான பேதுரு, யோவான் மற்றும் யாக்கோபு ஆகியோரை கெனசரேத்து ஏரிக்கரையில் வைத்து அழைத்த போது கூறினார். பேதுருவும் யோவானும் யாக்கோபும் மீன் பிடித்தலைத் தொழிலாகக் கொண்டவர்கள். வழக்கமாக அந்நாளும் அவர்கள் மீன்பிடிக்கச் சென்றனர். ஆனால் மீன்கள் எதுவும் கிடைக்கவில்லை. அவர்கள் மனம் சோர்வுற்றவர்களாக வலைகளை அலசிக் கொண்டிருந்தனர். அத்தருணத்தில் இயேசு அங்கு வந்தார். பெருந்திரளான மக்கள் இயேசுவின் வார்த்தைகளைக் கேட்க கூடியிருந்தனர். படகில் இருந்தவாறு மக்களிடம் போதிக்கலாம் என்று தீர்மானிக்கும் இயேசு, பேதுருவின் படகைத் தேர்வு செய்கிறார். படகைக், கரையிலிருந்து சற்று தள்ளிப் போட சொல்லும் இயேசு அதில் அமர்ந்தவாறு போதிக்கிறார். போதனை முடிந்ததும் இயேசு "ஆழத்திற்கு தள்ளிக் கொண்டு போய், மீன்பிடிக்க உங்கள் வலைகளை போடுங்கள்" (லூக் 5:4) என்கிறார். பேதுருவும் உடன் இருந்த மற்றவர்களும், இயேசுவின் வார்த்தைகளை கேட்டு, நம்பி ஆழத்தில் வலை போடுகிறார்கள். பெருந்திரளான மீன்கள் கிடைக்கின்றன.பேதுருவும் யாக்கோபும் யோவானும் எல்லாம் விட்டுவிட்டு இயேசுவைப் பின்தொடர்கிறார்கள். நற்செய்தியில் காணக்கிடக்கும் இந்நிகழ்வு ஆன்மீக

வாழ்வின் ஆழங்களை நோக்கியும், திருத்தொண்டுப் பணியின் அவசியத்தையும் வலியுறுத்துகிறது.

**1. இரவு முழுவதும் வலை வீசியும் மீன்கிடைக்காத, பேதுரு மற்றும் உடனிருந்தவர்களின் அருகில் இயேசு வருகிறார்:** வாழ்வில் கடினமாக உழைத்தும் பலனின்றி நிற்கும்பேதுருவையும் மற்றச் சீடர்களையும், ஏராளமான மக்களையும், இயேசு தேடி வருகிறார். "ஏரிக்கரையில் நின்று கொண்டிருக்கிறார்" என்னும் இறைவார்த்தை இதை நமக்கு உணர்த்துகிறது (லூக் 5:1). இயேசு இன்றும் நம்மைத் தேடி வருகிறார். அருளடையாளக் கொண்டாட்டங்கள், திருப்பலி, பிற பக்தி முயற்சிகள், ஆன்மீக மேய்ப்பர்கள், இன்னும் பல்வேறு முறையில் இயேசுவின் தேடல் தொடர்கிறது.

அருள்தரும் வாய்க்கால்களான அருளடையாளங்களின் பொருள் புரிந்து அவற்றை பெற்று வாழ்தல் கிறிஸ்தவ வாழ்வின் அடிப்படையாக உள்ளது. இவை நம்மை விண்ணகத்தை எதிர்நோக்கியவர்களாக வாழத் தூண்டும். ஆகையால், இன்றையச் சூழலில், முதலாவதாக அருளடையாள வாழ்வில் ஆழப்பட வேண்டியது அவசியமாக இருக்கிறது. இதற்காக பல்வேறு உரைகளும் பயிற்சிகளும், குருக்கள், திருவழிபாட்டுக் குழுவினர், பாடற்குழு மற்றும் இறைமக்கள் அனைவருக்கும் கொடுக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது.

மேலும் இயேசு நம்மைக் குருக்கள், அருட்சகோதரிகள் மற்றும் ஆன்மீக சேவையில் ஈடுபட்டிருக்கும் பொதுநிலையினர் வழியாகவும் தேடி வருகிறார். இவர்களின் வாழ்வானது நிரந்தரமாகப் புதுப்பிக்கப்பட வேண்டும். இது நியதி. இதற்கு இவ் யூபிலி ஆண்டுத் துணைநிற்கும்.

**2. இயேசுவின் போதனைகளை மக்களும் பேதுருவும் யாக்கோபும் யோவானும் கேட்கின்றனர்:** இறைவார்த்தைப் போதிப்பதற்காக இயேசு பேதுருவின் படகைத் தெரிந்தெடுத்தார். அதில் அமர்ந்தவாறு இயேசு போதித்தார். இயேசுவின் வாயிலிருந்து வந்த மொழிகளை மக்களும் முதல் சீடர்களும் கவனமாகக் கேட்கின்றனர்.

இன்றைய உலகிலும் இயேசு நம்மோடு பேசுகிறார். விவிலியம், மறையுரைகள், இதர செப வழிபாடுகள், ஆராதனைகள் என பட்டியல் நீள்கிறது. இதில் குறிப்பாக விவிலியம் வாசித்தலும் அதன் பொருளை வாழ்வில் ஏற்றுக்கொள்ளுதலும் அவசியமாகிறது. இதில் குடும்ப செபம் முக்கியப் பங்கு வகிக்கிறது. மேலும், உறவியக் கூட்டங்கள், தனி செபங்கள், ஆகியவை முறையாக்க வேண்டியது இயேசுவின் அழைப்பாக இருக்கிறது.

விவிலியம் வாசித்தலை வழக்கமாக்குதல் வேண்டும். குடும்ப செபம் எல்லாக் குடும்பங்களிலும் நடத்துவதற்கான முயற்சிகளை அனைவரும் சேர்ந்து முன்னெடுக்க வேண்டும். உறவியங்களை வலுப்படுத்தி, செயலூக்கமுடையதாக மாற்றுதல் தேவையாக இருக்கிறது. அன்றாட வாழ்வின் பணிச்சுமைகளை இயேசுவின் பாதத்தில் இறக்கி வைக்கவும், வாழ்வின் முக்கியமானத் தீர்மானங்களை கடவுள் முன்னிலையில் சமர்ப்பித்து செபிக்கவும் தனி செபம் அவசியமாகிறது. நமது பங்குகளில் இது ஊக்குவிக்கப்பட வேண்டும்.

**3. பேதுருவின் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்திய இறைவார்த்தை:** இயேசுவின் வார்த்தைகளைக் கேட்டு, அதன்படி வலை வீசிய பேதுரு அற்புதத்தைக் கண்டார். "ஐயா, இரவு முழுவதும் நாங்கள் பாடுபட்டு உழைத்தும் ஒன்றும் கிடைக்கவில்லை. ஆயினும் உமது சொற்படியே வலைகளைப் போடுகிறோம்" (லூக் 5:5), இறுதியில்; வலைகள் கிழியும் அளவுக்கு மீன்கள் கிடைக்கின்றன. இது பேதுருவுக்குள் மனமாற்றத்தை ஏற்படுத்துகிறது. அவர் தன்னைக் குறித்தும் தன்னுடைய வாழ்வைக் குறித்தும் அறிய வருகிறார். "ஆண்டவரே, நான் பாவி" (லூக் 5:8) என்னும் அறிவுக்கு வருகிறார். அதன் பிறகு அவர், தன்னுடைய பழைய வாழ்வை விட்டுவிட்டு, புதிய வாழ்வைத் தொடங்குகிறார்.

இன்றும் இறைவார்த்தையைக் கேட்டு மனம்மாறி கடவுளுக்குகந்த வாழ்க்கை நடத்த இயேசு அழைக்கிறார். கடவுள் நம் வழியாக நிறைவேற்ற விரும்பும் காரியத்தை அறிந்து அதன்படி வாழ்தல்தான் கடவுளுக்கு உகந்த வாழ்க்கை. இது தேர்ந்து தெளிதல் (Discernment) என்னும் சொல்லால் அறியப்படுகிறது. இதற்கு இரண்டு நிலைகள் உள்ளன: முதலாவதாக, வாழ்க்கை நிலையைத் தேர்ந்தெடுத்தல், அதாவது குருத்துவ வாழ்வு, துறவறவாழ்வு மற்றும் திருமண வாழ்வு இவற்றுள் ஒன்றைத் தேர்ந்தெடுத்தல். இதை அடிப்படை அழைப்பு எனலாம். இரண்டாவதாக, நாம் செய்யும் பணிகள். இதில் நற்செய்திப்பணி என்பது அனைவருக்கும் பொதுவான பணி. அத்தோடு, பிற வேலைகள், சமூகப்பணிகள், அரசியல் ஈடுபாடு போன்றவை அடங்கியுள்ளன. இவ்விரு அழைப்புகளையும் முறையாகத் தேர்ந்தெடுக்க உதவும் சூழலைக் குடும்பத்திலும், பங்களிலும் உருவாக்க வேண்டும். மேலும், பயிற்சிகள் சிறுவர் சிறுமியருக்கும், இளையோருக்கும் கொடுக்க வேண்டும்.

இவை, மறைக்கல்வி வகுப்புகள், பக்த இயக்கங்கள், கல்வி நிறுவனங்கள், இளையோர்ப்பணி போன்றவை மூலம்

செயலாக்கத்துக்குக் கொண்டு வர வேண்டியது கடவுளின் குரலாகவும் காலத்தின் குரலாகவும் இருக்கிறது.

**4. மனிதரைப் பிடிப்பவராக மாறிய பேதுரு:** இறுதியில் பேதுருவும் யாக்கோபும் யோவானும், படகையும், வலையையும் விட்டுவிட்டு இயேசுவைப் பின்தொடர்ந்தார்கள் (லூக் 5:10).

"உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்" என்னும் வார்த்தைகள் இயேசுவின் இறுதி சாசனமாக நமக்குத் தரப்பட்டிருக்கிறது. இக்கடமை திருமுழுக்குப் பெற்ற அனைவருக்கும் உண்டு.

நமது மறைமாவட்டமானது தமிழகத்தின் 7 மாவட்டங்களில் விரிவாக்கம் செய்யப்பட்டிருப்பது நீங்கள் அறிந்ததே. இவ்விடங்களில் நற்செய்திப் போதித்தல் நம்மிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும் பொறுப்பாக உள்ளது (1கொரி 9:17). குருக்கள், அருட்சகோதரிகளோடு, பொதுநிலை-யினரும் கரம்கோர்த்து செயல்பட வேண்டும். தக்கலை மறைமாவட்ட மக்கள் அனைவரும் செபங்கள், ஆளுதவி மற்றும் பொருளதவி வழியாக இயேசுவின் சாசனத்தை நடைமுறைப்படுத்த வேண்டும்.

**5. மக்களின் வாழ்க்கைச் சூழலுக்கு ஏற்ப நற்செய்தி அறிவித்த இயேசு:** இயேசு பேதுருவையும் யாக்கோபையும் யோவானையும் அழைக்கும் போது, கடல் சார்ந்து வாழும் மக்களின் வாழ்க்கைச் சூழல்களைப் பயன்படுத்துகிறார். வயலைச் சார்ந்து வாழ்ந்த மக்களிடம் வயலின் மொழிகளையும், ஆடுமேய்ப்பவர்களிடம் ஆடுமேய்த்தலின் உருவகங்களையும் பயன்படுத்துகிறார். இது நற்செய்திப் போதித்தலின் முக்கியமான அம்சமாக விளங்குகிறது. கிறிஸ்துவின் நற்செய்தி ஆழத்தில் வேரூன்ற மக்களின் மொழியும் கலாச்சாரக் குறிகளும் திருத்தொண்டுப்பணியாளர்கள் அறிந்திருக்க வேண்டும். இதற்கானப் பயிற்சிகளையும் நாம் மேற்கொள்ள வேண்டும்.

**6. சுற்றுச்சூழலைப் பேணுதல்:** கடல், வயல், மலை, பள்ளத்தாக்குகள், சமவெளி என இயேசு பல இடங்களுக்குச் செல்வதை காண்கிறோம். அவர் இயற்கையோடு இயைந்து வாழ்தலை இயல்பாகக் கொண்டார்.

இயற்கையின் அழிவு இருக்குழுக்களை பெரிதும் பாதிக்கின்றன எனத் திருத்தந்தை கூறுகிறார்: நாளைய தலைமுறை மற்றும் ஏழைகள். ஆகவே, நாமும் இயற்கையைப் பேணும் விதம், நெகிழியைக் கையாள்தல் (Plastic Management), கழிவுநீரை வெளியேற்றும் விதம் குறித்த விழிப்புணர்வு மற்றும் மரம் நடுதல்

போன்றவற்றில் கவனம் கொள்ள இவ் யூபிலி ஆண்டு அழைப்பு விடுக்கிறது.

இயேசுவின் வார்த்தைகள் வழிநின்று நாம் புரிந்து கொண்ட மேற்குறிப்பிட்ட காரியங்களை உள்ளடக்கிய செயல்திட்டமானது அடுத்த இரண்டு ஆண்டுகளும் நம்மை வழிநடத்தும்.

செயல்திட்டங்கள் வகுக்க இறைமக்களாகிய நீங்கள் அளித்த பரிந்துரைகள் பெரிதும் உதவும். தரப்பட்ட கேள்விகளைக் குறித்து விவாதம் நடத்தி அவற்றை மறைமாவட்டத்திற்கு அளித்த உங்களின் ஈடுபாடும் அர்ப்பணமும் பெரிதும்போற்றுதற்குரியது. தொடர்ந்து நாம் இணைந்து பயணிப்போம்.

மறைமாவட்ட அளவிலான யூபிலி தொடக்க விழா, நவம்பர் 10, 2019 அன்று படந்தாலுமூடு திருஇருதய ஆலய வளாகத்தில் வைத்து பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறும். இதில் இரு பகுதிகள் உள்ளன. முதல் பகுதி, திருப்பலி மற்றும் யூபிலி தொடக்க நிகழ்வுகளை உள்ளடக்கியதாக இருக்கும். திருப்பலியில், பங்குத்தந்தை, கைக்காரர்கள், பங்கு பிரநிதிமன்ற பெண் பிரதிநிதி மற்றும் கன்னியர் இல்லத் தலைவி ஆகியோர் தொடக்கமுதல் தவறாமல் பங்கேற்க வேண்டும். திருப்பலியின் இறுதியில் யூபிலி மெழுகுதிரி கன்னியர் இல்லங்களுக்கும் வழங்கப்படும். இரண்டாவது பகுதி 'ஆழத்தில் வலை போடுங்கள்' என்னும் மையக்கருத்தின் கலைவடிவக் காட்சியாக்கமாக அமையும். இறைமக்கள் அனைவரும் உங்கள் பங்குத்தந்தையின் ஆலோசனையின் படி நிகழ்வுகளில் பங்கேற்க அன்போடு அழைக்கிறேன். நிகழ்வுகள் மாலை 7.30 மணிக்கு நிறைவடையும் விதத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பங்களவிலான தொடக்க விழா 24.11.2019 ஞாயிறு அன்று நடத்தக் கேட்டுக்கொள்கிறேன். இதை ஒரு முக்கிய நிகழ்வாகக் கண்டு மிகுந்த தயாரிப்புடன் நடத்த வேண்டும்.

1. திருப்பலிக்கு முன்னர் செபமாலை பவனி முன்னெடுக்க அறிவுறுத்துகிறேன். இதை இருவகையில் ஒருங்கிணைக்கலாம். ஒவ்வொரு உறவியங்களும் தத்தமது உறவியங்களிலிருந்து செபமாலை சொல்லி ஆலயத்தை வந்தடைதல். இல்லையென்றால், குருசடி அல்லது அதைப்போன்ற கோயிலுக்கு அருகாமையில் உள்ள இடத்தில் மக்கள் அனைவரும் ஒன்று கூடி, செபமாலை செபித்து ஆலயத்தை வந்தடைதல்.

2. அதன்பின் ஆடம்பரமான திருப்பலியையும் தொடக்க நிகழ்வையும் நடத்துதல்.

3. தொடக்கவிழாவை, திருப்பலியின் போது 'அனைத்திற்கும் ஆண்டவரே' பாடலுக்கு முன்னர் மெழுகுதிரிஏற்றி வைத்துதொடங்கவும்.

திரியை, பங்குத்தந்தை, கன்னியர் இல்லத்தலைவி, பங்குக் கைக்காரர்கள் மற்றும் பிரநிதிமன்ற பெண் உறுப்பினர் ஆகியோர் சேர்ந்து ஏற்ற வேண்டும்.

4. திருப்பலியின் இறுதியில் குடும்பத்தின் தலைவரும் தலைவியும் இணைந்து பங்குத்தந்தையிடம் தங்களது குடும்பத்திற்கான யூபிலி மெழுகுதிரி பெற்றுக் கொள்ள வேண்டும். அத்திரியை அன்றாடம் குடும்ப செபத்தின் போது ஏற்ற வேண்டும்.

5. திருப்பலியின் இறுதியில் அனைவரும் யூபிலி செபத்தைச் சொல்லி / யூபிலி பாடல் பாடி பங்களவிலான தொடக்க விழாவை நிறைவு செய்யலாம்.

நாம் முன்னெடுக்கும் அனைத்திலும் இறைவனின் கரம் செயல்பட செபிப்போம். இணைந்து முன்னேறுவோம்.

இறைவன் உங்களையும் உங்கள் குடும்பங்களையும் உங்கள் பணிகளையும் நிறைவாக ஆசீர்வதிப்பாராக.

**என்றும் ஏசே மெசியாவில்**

+ மார் ஜார்ஜ் [illegible] திரன் SDB
தக்கலை [illegible] வட்ட ஆயர்

குறிப்பு: இவ் ஆயர் திருமுகத்தை 03.11.2019 ஞாயிற்றுக்கிழமை அனைத்து பங்குகளிலும் திருப்பலியின் போது வாசிக்க வேண்டும்.

## வரவிருக்கும் நிகழ்வுகள் - நவம்பர் 2019

| | |
|---|---|
| 1 | அருட்பணி பேரவை கூட்டம் – சங்கமம் |
| 3 | ஆலய அர்ச்சிப்பு – கழுவன்திட்டை |
| 10 | மறைமாவட்ட தினம் மற்றும் வெள்ளிவிழா துவக்கவிழா – படந்தாலுமூடு |
| 17 | மிஷன் லீக் பேரணி – கல்லுவிளை – காட்டாத்துறை |
| 20 | அருட்தந்தையர் கூட்டம் |
| 23 | புனித மரியம் திரேசியாவின் புனிதர்பட்ட கொண்டாட்டம் – படந்தாலுமூடு |
| 24 | மறைமாவட்ட வெள்ளிவிழா பங்கு அளவில் துவக்கவிழா – |
| 29 01 | மறைமாவட்ட தியானம் – கல்லுவிளை |



# CATECHISM
# மறைக்கல்வி

"உங்கள் நம்பிக்கைக்கு அடிப்படை மனித ஞானம் அல்ல கடவுளின் வல்லமையே "
( 1 கொரிந்தியர் 2 : 5 )

**அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள்!**

**ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு - சூசைபுரம் மறை வட்டம் :-**

சூசைபுரம் மறை வட்ட ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு சூசைபுரம் புனித. அல்போன்சா கல்லூரியில் வைத்து செப்டம்பர் 29 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு மறை வட்ட இயக்குநர் பேரருட்தந்தை. ஆன்றணி ஜோஸ் அவர்களின் தலைமையில், இயக்குநர் அருட்தந்தை. பிறின்ஸ் மாலியில் அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது. மாங்கரை மறைக்கல்வி நிலைய ஆசிரியர்கள் இறைவணக்கப் பாடல் பாடினர். மறை வட்ட இயக்குநர் பேரருட்தந்தை. ஆன்றணி ஜோஸ் அவர்கள் வருகைபுரிந்த அருட்தந்தையர்களையும் மற்றும் அனைவரையும் வரவேற்று உரை நிகழ்த்தினார்.

பேரருட்தந்தை. டென்சி முண்டுநடைக்கல் அவர்கள் தொடக்கத் திருவருட்சாதனங்களைப் பற்றி எளிய முறையில் அனைவருக்கும் புரியும் வகையில் மிகச் சிறப்பாக வகுப்புகள் நடத்தினார். சூசைபுரம் மறை வட்டத்திலுள்ள ஆசிரியர்கள் 122 பேர் கலந்துக் கொண்டு சிறப்பித்தனர். பின் கருத்தரங்கானது சுமார் 4.30 மணியளவில் திரு. பன்னீர் செல்வம் ஆசிரியர் அவர்களின் நன்றியுரையுடன் இனிதே முடிவுற்றது. இறுதியாக அனைவருக்கும் தேனீர் வழங்கப்பட்டது. சூசைபுரம் மறை வட்ட ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு மிகச் சிறப்பாக நடைபெற ஒத்துழைத்த சூசைபுரம் மறை வட்ட இயக்குநரும், சூசைபுரம் மறை வட்ட ஆலயத்தின் பங்குத்தந்தையுமான

பேரருட்தந்தை. ஆன்றணி ஜோஸ் அவர்களுக்கும், மறை வட்ட செயலர். அருட்சகோதரி லின்ஸ் SABS அவர்களுக்கும், சூசைபுரம் மறைவட்டத்திலுள்ள அனைத்து அருட்தந்தையர்களுக்கும், தலைமையாசிரியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகள்.

**மறைவட்ட எழுத்துப் போட்டிகள் :-**

2019-2020 ஆம் ஆண்டு விவிலியக் கலைவிழா எழுத்துப் போட்டிகள் மறை வட்ட அளவில் அக்டோபர் 13 ஞாயிற்றுக்கிழமை அன்று பிற்பகல் 2.30 மணி முதல் 4.30 மணி

வரை ௮ மறை வட்டங்களிலும் நடைபெற்றது. பங்களவில் நடைபெற்ற போட்டிகளில் முதலிடம் பெற்ற மாணவர்கள் இப்போட்டிகளில் பங்கு பெற்றனர்.

௨.௩௦ மணி முதல் ௩.௩௦ மணி வரை Sub Juniors- Colouring,- Juniors, Seniors & Sup. Seniors ஓவியம் வரைதல் போட்டியும், ௩.௩௦ மணி முதல் ௪.௩௦ வரை Senior கட்டுரைப் போட்டியும், Super Seniors கவிதை எழுதும் போட்டியும் நடைபெற்றது. அனைத்து மறை வட்டங்களிலுமாக ௮௦௦ மாணவர்கள்

இப்போட்டிகளில் பங்கு பெற்றனர்.

**தலைமையாசிரியர்களின் கூட்டம்** :-

தலைமையாசிரியர்களின் கூட்டம் அக்டோபர் ௨௮ சனிக்கிழமை அன்று பிற்பகல் ௨.௩௦ மணிக்கு மறைக்கல்வி அலுவலகத்தில் வைத்து இயக்குநர் அருட்தந்தை. பிறின்ஸ் மாலியில் அவர்களின் தலைமையில்

தூய ஆவிப் பாடல் மற்றும் செபத்துடன் ஆரம்பமானது. தலைமையாசிரியை அருட்சகோதரி. ஜெர்மி CMC அவர்கள் இயக்குநர் அருட்தந்தை அவர்களையும் வருகைபுரிந்த அனைவரையும் வாழ்த்தி வரவேற்றார். செயலர் அருட்சகோதரி. ட்றீசா ஜோஸ் அவர்கள் அறிக்கை வாசித்தார்.இக்கூடுகையின் போது இயக்குநர் அருட்தந்தை அவர்கள் மறைவட்ட அளவில் நடைபெற்ற ஆசிரியர்களுக்கான கருத்தரங்கில் பங்கெடுத்த அனைவருக்கும் நன்றி கூறினார். மேலும் வினாத்தாள் தயாரித்து வழங்கிய அனைத்து ஆசிரியர்களுக்கும் தேர்வுக் குழுத் தலைவர் ஊக்குவிப்பாளர் திரு. மரியதாஸ் அவர்களுக்கும் நன்றி கூறினார். முதல் பருவத் தேர்வுக்கான தமிழ் மற்றும் மலையாளம் வினாத்தாள் அனைத்து மறைக்கல்வி நிலையங்களுக்கும் வழங்கப்பட்டது. மேலும் விவிலியக் கலைவிழா 2019- 2020 ஆம் ஆண்டிற்கான தலைப்புகள் அடங்கிய விவரப்பட்டியலும், படிவமும் வழங்கப்பட்டது. இந்த ஆண்டுக்கான 12 -ம் வகுப்பு மாணவர்களுக்கான செய்முறை அறிக்கை தலைப்பு கொடுக்கப்பட்டது. திருப்பலிக்கு பயன்படுத்துகின்ற புனித ஆடைகள், துணிகள், புத்தகம், பாத்திரங்கள் அதனுடைய பொருளும், அதனுடைய படங்களுடன் விளக்கமாக எழுதி அறிக்கையாக சமர்ப்பிக்க வேண்டும். என்றும் இயக்குநர் அவர்கள் கூறினார். மறைக்கல்வி மாணவர்களின் 2-ஆம் பருவத் தேர்வுக்கான தமிழ் மற்றும் மலையாளம் வினாத்தாள் தயாரிக்க ஒவ்வொரு மறைக்கல்வி நிலையங்களுக்கும் வழங்கப்பட்டது.

பின்னர் இக்கூடுகையானது தலைமையாசிரியை திருமதி. நிர்மலா ஜோய் அவர்களின் நன்றியுரையுடன் சுமார் 4.15 மணியளவில் செபத்துடன் இனிதே முடிவுற்றது.

**தேர்வு :-**

மறைக்கல்வி 1/2 வகுப்பு முதல் வகுப்பு 12 வரை உள்ள மாணவர்களுக்கான முதல் பருவத் தேர்வு அக்டோபர் 27 ஞாயிற்றுக்கிழமையன்று அனைத்து மறைக்கல்வி நிலையங்களிலும் நடைபெற்றது.

**ஊக்குவிப்பாளர்களின் கூடுகை :-**

ஊக்குவிப்பாளர்களின் கூடுகை அக்டோபர் 26 சனிக்கிழமை அன்று பிற்பகல் 5.30 மணிக்கு மறைக்கல்வி அலுவலகத்தில் வைத்து இயக்குநர் அருட்தந்தை. பிறின்ஸ் மாலியில் அவர்களின் தலைமையில் செபத்துடன் ஆரம்பமானது. ஊக்குவிப்பாளர்களின் ஒருங்கிணைப்பாளர் திரு. கிறிஸ்துதாஸ் அவர்கள் வரவேற்புரை கூறி அறிக்கை சமர்ப்பித்தார். இக்கூடுகையின் போது ஊக்குவிப்பாளர்கள் அனைவரும் முதல் பார்வையின் அறிக்கை சமர்ப்பித்தனர். மேலும் இக்கூடுகையின் போது ஜுபிலி வருடத்தில் மறைக்கல்வி வழியாக என்னென்ன செய்ய வேண்டும் என்பது பற்றியும், 2019- 2020 ஆம் ஆண்டு விவிலியக் கலைவிழா பற்றியும் கலந்தாலோசிக்கப்பட்டது. மறைவட்ட அளவில் நடைபெறும் விவிலியக் கலைவிழா போட்டிகளுக்கு ஒவ்வொரு மறை வட்டத்திற்கும் ஊக்குவிப்பாளர்களுக்கு பொறுப்பு கொடுக்கப்பட்டது. மேலும் இக்கூடுகையின் போது மறைக்கல்வி நிலையங்களை பார்வையிடுவதற்கான II Visit படிவம் வழங்கப்பட்டது. பின்னர் இக்கூடுகையானது ஊக்குவிப்பாளர் திரு. மரியதாஸ் அவர்களின் நன்றியுரையுடன் சுமார் 6.00 மணியளவில் இனிதே முடிவுற்றது.

**இதர அறிவிப்புகள் :-**

November 24 Sunday - Bible Fest Writing Competitions 2019- 2020 Diocesan Level at 2.30 Pm – 4.30 Pm at Padanthalu moodu

December 08 Sunday - Teachers Seminar (Forane Level Teachers Seminar Absentees only)

December 14 Saturday – Last date to submit the 2nd Semester exam Question papers

December 14 Saturday – HM Meeting & Christmas Gathering at 2.30 Pm at Kalluvilai

**அருட்தந்தை பிரின்ஸ் மாலியில்**

**இயக்குநர்**

YOUTH APOSTOLATE
இளையோர் பணி

# தக்கலை கத்தோலிக்க இளைஞர் இயக்கம்

**மறைமாவட்ட பொறுப்பாளர்களின் கூட்டம்**

தக்கலை மறைமாவட்ட இளையோர் இயக்க மறைமாவட்ட பொறுப்பாளர்களின் கூட்டமானது 6-10-19 அன்று கன்னியாகுமரி சுற்றுச்சூழல் பூங்காவில் வைத்து நடைபெற்றது. இக்கூட்டத்தில் இயக்குநர் அருட்தந்தை. ஜோசப் சந்தோஷ் அவர்களும் அனைத்து மறைமாவட்ட பொறுப்பாளர்களும் கலந்து கொண்டனர்.

**தீர்மானங்கள்**

மறைமாவட்டத்தின் அனைத்து அலகுகளையும் சந்திக்க வேண்டும். Data Collection, எடுக்கவும் ஜனவரி மாதம் இளையோர் இயக்க கலைவிழா நடத்தவும் தீர்மானிக்கப்பட்டது வேண்டும்.

**அலகு சந்திப்பு மஞ்சாலுமூடு மறைமாவட்டம்**

6-10-19 அன்று காரோடு அலகு சந்திக்கப்பட்டது. மஞ்சாலுமூடு மறைவட்ட பொறுப்பாளர்கள் மற்றும் அலகு பொறுப்பாளர்களின் கூட்டம் மதியம் 3 மணியளவில் நடைபெற்றது. 20-10-19 அன்று மூக்கூட்டுக்கல் அலகு சந்திக்கப்பட்டது. காரோடு புனித சூசையப்பர் தேவாலய இளையோர் இயக்கம் சார்பாக 20-10-19 அன்று முஞ்சிறை அன்பகம் முதியோர் இல்லம் பார்வையிடப்பட்டது. உணவு வழங்கப்பட்டது. முதியோர்கள் தங்களின் கடந்த காலங்களை நினைவு கூர்ந்தனர். இந்நிகழ்ச்சிகளில் பங்குத்தந்தை உடனிருந்தார்.

**தக்கலை - பிலாங்காலை மறைவட்டம்**

13-10-19 அன்று பிலாங்காலை அலகை மறைவட்ட பொறுப்பாளர்கள் சந்தித்தனர்.

**சூசைபுரம் மறைவட்டம்**

5-10-19 அன்று கிள்ளியூர் அலகையும் 13-10-19 அன்று மாங்கரை அலகையும் மறைவாட்ட பொறுப்பாளர்கள் மற்றும் சூசைபுரம் மறைவட்ட பொறுப்பாளர்கள் சந்தித்தனர்.

**நித்திரவிளை மறைவட்டம்**

6-10-19 அன்று முஞ்சிறை அலகை மதியம் 3 மணி அளவில் இயக்குநர் தந்தை ஜோசப் சந்தோஷ் தலைமையில் அலகு சந்திப்பு கூட்டம் நடைபெற்றது.

**நன்றிகள்**

அலகுகள் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்து தந்த மறைவட்ட இயக்குநர் தந்தையர்களுக்கும், மறைமாவட்ட மற்றும் மறைவட்ட பொறுப்பாளர்களுக்கும் அலகு பொறுப்பாளர்களுக்கும் தக்கலை இளையோர் இயக்கத்தின் சார்பாக நன்றிகளைத் தெரிவித்துக் கொ க ா ள் கி ே ற ன் .

**ஷிஜி,**
**செயலர்**

# சிறுமலர்
# MISSION LEAGUE



**பொறுப்பாளர்கள் கூட்டம்**

நமது மறைமாவட்ட மிஷன் லீக் பொறுப்பாளர்கள் கூட்டம் 31-10-2019 அன்று மதியம் 2 மணியளவில் நடைபெற்றது. அன்றைய கூட்டத்தில் வரும் நவம்பர் 17-ம் தேதி மதியம் 2 மணியளவில் நடைபெறும் வருடாந்திர நம்பிக்கை நடைபயணம் பற்றிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மேலும் நடைபயணம் கல்லுவிளை மறைக்கல்வி மறைமாவட்ட அலுவலக வளாகத்தில் துவங்கி காட்டாத்துறை புனித மிக்கேல் ஆலயத்தில் நிறைவடையும். அன்றைய தினம் அனைத்து மிஷன் லீக் உறுப்பினர்களும் ஆசிரியர்களும் கலந்து கொண்டு சிறப்பிக்க அன்பாய் வேண்டுவதோடு, எல்லா பக்த இயக்க உறுப்பினர்களும் கலந்து கொண்டு ஒருங்கிணைக்குமாறு அன்பாய் கேட்டுக்கொள்கிறேன்

**அருட்தந்தை அலெக்ஸ் புத்தேட்,**
**இயக்குநர்**

## பிலாங்கரை சி.எம்.சி கன்னியர் இல்லத்தின் வெள்ளி விழா

சி.எம்.சி அருட்சகோதரிகள் நடத்தும் பிலாங்கரை மரியம் நிவாஸ் கன்னியர் இல்லம் இருபத்தைந்து ஆண்டு மிஷன் பணிகளை நிறைவு செய்துள்ளது. நிறைவு விழா 26 அக்டோபர் 2019 அன்று பிலாங்கரையில் நடைபெற்றது. குருகுல முதல்வர் பேரருட்தந்தை. தாமஸ் பவ்வத்துப்பறம்பில் மற்றும் முன்னாள் குருகுல முதல்வர் பேரருட்தந்தை. ஜோஸ் முட்டத்துப்பாடம் விருந்தினராக கலந்து கொண்டார். இந்த வரலாற்று நிகழ்வில் பல அருட்தந்தையர்கள் மற்றும் இறைமக்கள் கலந்து கொண்டனர். மாகாணத் தலைவி அன்னை விஜி சி.எம்.சி, கன்னியர் இல்லத்தின் தலைவியுடன் சேர்ந்து நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தார். மறைமாவட்டம் சார்பில் வெள்ளிவிழா வாழ்த்துகளும் பாராட்டுக்களும்.

HOLY CHILDHOOD
குழந்தை ஈசோ

# குழந்தை ஈசோ இயக்கம்

**இறையாட்சியை சிறு பிள்ளையைப் போல் ஏற்றுக்கொள்ளாதோர் அதற்கு உட்படமாட்டார். (மாற் 10 -15)**

**கருத்தரங்கு**

சூசைபுரம் மறைவட்டக் குழந்தைகளுக்கான கருத்தரங்கு 29-9-19 அன்று சனிக்கிழமை சூசைபுரம் புனித அல்போன்சா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் வைத்து நடைபெற்றது. இதனை பேரருட்தந்தை ஆன்றணி ஜோஸ் அவர்கள் தொடக்க உரையாற்றி துவங்கி வைத்தார். இயக்குநர் தந்தை குழந்தைகளுக்கான அறிவுரை வழங்கினர். அருட்சகோதரர் ஜிஜு மற்றும் சகோதரர் மனோஜ் அவர்களும் வகுப்பு நடத்தினர். செய்கைபாடல்கள், கதைகள், இறைவார்த்தைப் பகிர்ந்துக் கொள்ளுதல் இடம் பெற்றது. மாலை 4.30 மணிக்கு கருத்தரங்கு நிறைவடைந்தது. கடைசியாக அனைவருக்கும் தேனீர் வழங்கப்பட்டது.

**மறைமாவட்ட ஒருங்கிணைப்பாளர் கூட்டம்**

28-10-19 அன்று திங்கள்கிழமை கல்லுவிளை குழந்தை ஈசோ இயக்க அலுவலகத்தில் வைத்து இயக்குநர் தலைமையில் மறைமாவட்ட ஒருங்கிணைப்பாளர் இணைந்து 2 வருட திட்டத்தைப்பற்றி கலந்துரையாடப்பட்டது. செயலர் அருட்சகோதரி ஜெனி அவர்களின் பிறந்தநாள் விழாவும் கொண்டாடப்பட்டது.

**மறைவட்ட ஒருங்கிணைப்பாளர்கள்**

| | | |
|---|---|---|
| தக்கலை பிலாங்காலை | - | Sr. Soona CMC |
| சூசைபுரம் | - | Sr . Teena SABS |
| படந்தாலுமூடு | - | Sr. Suji SDS |
| நித்திரவிளை | - | Sr. Nirmalin SD |
| மஞ்சாலுமூடு | - | Sr. Cicy SD |
| ஆறுகாணி | - | Sr. Liza SH |

**அருட்தந்தை ஜோமோன்**
**மங்கலாமடத்தில், இயக்குநர்**



FAMILY APOSTOLATE

குடும்ப நல்வாழ்வு

# இல்வாழ்வு இயக்கம்

**குடும்ப நல வாழ்வு மற்றும் மது அடிமைகள் மறுவாழ்வு மையம்**

கல்லுவிளை மது அடிமைகள் மறுவாழ்வு மையத்தில் மது அடிமைகள் மற்றும் மனநோயாளிகளுக்கான சிகிட்சையும் ஆற்றுப்படுத்தலும் நடைபெற்று வருகின்றன. இம்மையத்தில் திங்கள், செவ்வாய், புதன் ஆகிய 3 நாட்களும் மது அடிமைகள் மற்றும் மனநோயாளிகளுக்கான சிகிட்சையும் ஆற்றுப்படுத்தலும் நடைபெற்று வருகின்றன. முதல் மற்றும் மூன்றாவது திங்கட்கிழமைகளில் மதியம் 12.30 மணிக்கு மனநல மருத்துவர் வருகை புரிவார். இந்நாளில் மருத்துவரிடம் ஆலோசனை பெற்றுக் கொள்ளலாம். இம்மையத்திலிருந்து 800 க்கு மேற்பட்ட மது நோயாளிகளும் மன நோயாளிகளும் சிகிட்சை பெற்று நலமடைந்துள்ளனர்.

**திருமண பயிற்சி வகுப்பு**

திருமண பயிற்சி வகுப்பு இரு மாதத்திற்கு ஒரு முறை 3 நாட்கள் நடைபெறும். அக்டோபர் மாதம் 11, 12, 13 ஆகிய 3 நாட்களும் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியில் தனித்திறன் பெற்ற அருட்தந்தையர்கள் மருத்துவர்கள் மற்றும் ஆசிரியர்களால் வகுப்பு நடத்தப்படுகின்றது. நிறைவு நாளான ஞாயிறு மதியம் 2 மணிக்கு நடைபெற்ற பெற்றோர்களுக்கான பயிற்சியில் கல்லுவிளையில் வருகை புரியும் மனநல மருத்துவரால் வகுப்பு நடத்தப்பட்டது. பயிற்சி கட்டணம் ரூபாய் 750 ஆகும். இடம் தக்கலை சங்கமம்.

**அருட்தந்தை அஜீஷ்**
**இயக்குநர்**




# தக்கலை மத்திய சபை

**அரசு மருத்துவமனை துப்புரவு முகாம்**

தேசத்தோடு ஒருநாள் எனும் மையச்சிந்தனையில் கடந்த 15 ஆண்டுகளாக நடைபெற்று வரும் அரசு மருத்துவமனை துப்புரவு முகாம் இவ்வாண்டும் அக்டோபர் 2 – ம் தேதி குலசேகரம் மருத்துவமனையில் நடந்தது. முகாமை மத்திய ஆன்மீக ஆலோசகர் பேரருட்தந்தை தாமஸ் பவ்வத்துப்பறம்பில் அவர்களின் வழிகாட்டுதலில் சேனங்கோடு பங்குத்தந்தை அருட்தந்தை சாஜன் நெட்டப்பொங்கு அவர்கள் தொடங்கி வைத்தார்கள். முன்னதாக மத்திய சபைத் தலைவர் சகோ. ஐய்யாத்துரை அவர்கள் அனைவரையும் வரவேற்றார்கள். தொடக்க உரையாற்றிய அருட்தந்தை "அவர்கள் வின்செந்தியப் பணிகளை தாம் நேர்மையாக அனுபவித்திருக்கிறேன். இன்று சுமார் 200 க்கும் அதிகமானோர்கள் கலந்து கொள்ளும் கூட்டத்தில் அதை நேரிடையாகப் பார்க்கிறேன்" எனக் கூறி தொடங்கி வைத்தார். மருத்துவமனையின் தலைமை மருத்துவர் மற்றும் பணியாளர்களும் கலந்துக் கொண்டனர். 7 வட்டார சபைத் தலைவர்களும் தத்தம் குழு சார்பில் பங்கெடுத்து துப்புரவு பணி செய்தார்கள். இறுதியில் செயலர் சகோ. எட்வின்சன் நன்றி கூறினார். இதற்கான ஏற்பாடுகளை துணைத் தலைவர்கள் சகோ. சவுந்தர ராஜ், சகோ. மணிவண்ணன் மற்றும் களியல் வட்டார சபைத் தலைவர்கள் சகோ. தனிஸ்லாஸ் ஆகியோர் செய்திருந்தனர். குலசேகரம் SABS அருட்சகோதரிகளும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

**களியல் வட்டார சபை ஆண்டுவிழா அறிக்கை**

களியல் வட்டார சபையின் ஆண்டுவிழா 13-10-19 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு முழுக்கோடு புனித தோமையார் ஆலயத்தில் வைத்து நடைபெற்றது.

கூட்டத்தின் ஆரம்பத்தில் முழுக்கோடு புனித தோமையார் ஆலய உதவிப்பங்குத்தந்தை அருட்தந்தை செபாஸ்டீன் CMI முன்னிலையில் வட்டார சபைத் தலைவர் சகோ. தனிஸ்லாஸ் தலைமையில் தூய ஆவி பாடலுடக்குப் பின் முழுக்கோடு பெண்கள் சங்க தலைவி சகோதரி றமுனா பைபிள் வாசித்தார்கள் வட்டார சபை பெண்கள் பிரதிநிதி சகோதரி சஜிதா கையேடு படித்தார்கள். பின் வட்டார சபை துணைத்தலைவர் சகோதரர் ரமேஷ் குமார் முழுக்கோடு துணைப்பங்குத் தந்தை, மத்திய சபைத்தலைவர் சகோ. மணிவண்ணன், மத்தியசபை திட்டகண்காணிப்பாளர் சகோ. ஷிபுமோன், வட்டார சபை நிர்வாகிகள், கிளைச்சபை நிர்வாகிகள், மற்றும் உறுப்பினர்கள் என ஏராளமானோர் பங்கெடுத்தனர். தொடர்ந்து வட்டார சபையின் ஆண்டறிக்கையை வட்டார சபை செயலாளர் சகோ. தங்கசுவாமி அவர்களால் வாசிக்கப்பட்டு கூட்டத்தில் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. பின்பு மத்திய சபைத்துணைத்தலைவர் சகோ. மணிவண்ணன் உரையாற்றும் போது வின்செந்தியன் ஒவ்வொருவரும் மற்ற ஏழை எளிய மக்களுக்கு உதவ வேண்டும் என கூறினார், பின்னர் மாறப்பாடி புனித தோமையார் ஆலய பங்குதந்தைத் அருட்தந்தை. ஜேம்ஸ் கானாக்கானில் மாலை 3 மணியிலிருந்து 3.45 மணி வரை சிறப்பான ஒரு தியான உரையாற்றினார்கள். அது அனைவரின் மனதையும் கவரும் வகையில் அமைந்தது. பின்பு அனைவருக்கும் தேனீர் வழங்கப்பட்டது. வட்டாரசபைத் தலைவர் அவர்கள் மத்தியசபையால் வழங்கப்பட்ட சில அறிவிப்புகளையும் வழங்கி விட்டு கூட்டத்தில் கலந்து கொண்ட உதவி பங்குத்தந்தை மத்தியசபை உறுப்பினர்கள், தியான உரையாற்ற வருகை தந்த நிர்வாகிகள், உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றி கூறினார்கள். பின்பு இறுதி ஜெபத்துக்குப் பின் உதவி பங்குத்தந்தை அருட்திரு செபாஸ்டீன் CMI யின் இறுதி ஆசிருடன் இனிதே முடிவுற்றது.

**இவன், செயலர்**

Kanyakumari Social Service Society

# கன்னியாகுமரி சமூக சேவை சங்கம்

**பால் பதப்படுத்தும் பயிற்சி முகாம்:**

கன்னியாகுமரி சமூக சேவை சங்கம், தமிழ்நாடு கால்நடை ஆராய்ச்சி மையம் பறக்கையுடன் இணைந்து நடத்திய பால் பதப்படுத்தும் பயிற்சி முகாம் 23.10.2019 அன்று பாலப்பள்ளம் புனித கிறிஸ்து அரசர் சமூக நலக்கூடத்தில் வைத்து நடைபெற்றது. தமிழ்நாடு கால்நடை ஆராய்ச்சி மையத்தின் மருத்துவர் செல்வகுமார் அவர்கள் வகுப்பு எடுத்தார்கள். அவர்கள் வகுப்பு எடுக்கும் பொழுது பழங்காலம் தொட்டே நாம் பாலை பாலாய் மட்டும் பயன்படுத்துவதில்லை மாறாக வீட்டிலேயே தயிர், மோர், வெண்ணெய் நெய், சீம்பால் என பல்வேறு பாலிலான பொருட்கள் தயாரித்து வந்தோம். தற்போது பாலைப் பதப்படுத்தி பன்னீர் ஐஸ்கிரீம், குல்பி, ரசகுல்லா, பால் அல்வா என பல்வேறு வகையான பொருட்கள் தயாரிக்கலாம். பாலை பாஸ்டுரைசேஷன் மூலம் 4 வாரம் வரை பாதுகாத்து வைக்க முடியும் என்றும் கூறினார். திரு ராஜசேகர், ஒருங்கிணைப்பாளர் மற்றும் திருமதி.சுனிதா, களப்பணியாளர் உட்பட 40 நபர்கள் கலந்து கொண்டனர்.

**மருத்துவ முகாம்:**

கன்னியாகுமரி சமூக சேவை சங்கம், அன்னை தெரசா நோய் தணிப்பு நல்வாழ்வு மையம் மற்றும் நெய்யூர் C.S.I மிஷன் மருத்துவமனையும் இணைந்து இலவச பொது மருத்துவம் மற்றும் புற்றுநோய் விழிப்புணர்வு முகாம்; 02-10-2019 அன்று வயலின்கரை அன்னை தெரசா நோய் தணிப்பு நல்வாழ்வு மையத்தில் வைத்து நடைபெற்றது. இம்முகாமினை அருட்தந்தை றோபின்ஸ் குழிக்கோடில், பங்குத்தந்தை, புனித அந்தோணியார் ஆலயம், வயலின்கரை அவர்கள் குத்துவிளக்கேற்றி துவங்கி வைத்தார்கள். இந்நிகழ்வில் அருட்தந்தை தோமஸ் பூவத்துமூட்டில், துணை இயக்குநர், KKSSS மருத்துவர்கள் Dr.சிஜின் மற்றும் Dr.தேவ், நெய்யூர் C.S.I மிஷன் மருத்துவமனை; கலந்துகொண்டார்கள். பயனாளிகளுக்கு பரிசோதனை நடத்தப்பட்டு நோய் அறிகுறிகள் இருப்பவர்களுக்கு மருந்து மற்றும்

மருத்துவ ஆலோசனையும்; வழங்கினார்கள். காலை 9 மணி முதல் 2 மணி வரை இம்முகாமானது நடைபெற்றது. இதில் வயலின்கரை மற்றும் சுற்றுப்பகுதிகளிலிருந்து 80 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

## SAFP வட்டார கூட்டம்:

செப்டம்பர் 25 மற்றும் 27 –ம் தியதிகளில் "குடும்பம் ஒன்றை காப்போம்" திட்டத்தின வட்டார கூட்டமானது ஆசீர் அரங்கம், கல்லுவிளையில் வைத்து நடைபெற்றது. இதனை KKSSS – ன் துணை இயக்குநர் அருட்தந்தை தோமஸ் பூவத்துமூட்டில் துவக்கவுரை நிகழ்த்தி துவங்கி வைத்தார்கள். இத்திட்டத்தின் ஒருங்கிணைப்பாளர் திரு.விஜயராஜன் அவர்கள் நேர்மறை எண்ணங்களை குறித்த விழிப்புணர்வு வகுப்பை எடுத்தார்கள். நலமாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ வேண்டும் என்பது தான் நம் அனைவரின் ஆசை ஒருவரின் மகிழ்ச்சியைத் தீர்மானிப்பது அவருடைய மனநிலை மட்டுமே. நம் வாழ்க்கையில் இரண்டு வகையான மனிதர்களைச் சந்தித்திருப்போம். ஒரு பிரிவினர் தங்களுக்குக் கிடைத்த சாதாரண வெற்றியைக் கூட கொண்டாடித்தீர்த்து விடுவார்கள் மற்றொரு பிரிவினரோ கடுமையான முயற்சியால் கிடைத்த வெற்றியைக் கூட கொண்டாட மாட்டார்கள் இதை விட அதிகமாக கிடைத்திருக்கலாமே என்று வருத்தப்பட்டுக் கொண்டிருப்பர். மகிழ்ச்சி, துக்கம் இரண்டுமே கிடைக்கும் வெற்றி–யினை பொறுத்தது இல்லை மாறாக அது நம் மனநிலையில் இருக்கிறது என்றார்கள். நேர்மறை எண்ணங்கள் தான் மனித வாழ்வில் மகிழ்ச்சியையும், வெற்றியையும் அடைய கூடிய வழி. இந்நிகழ்வில் களப்பணியாளர்கள் திருமதி. லிசி மற்றும் திருமதி. சரோஜம் உட்பட 182 பயனாளிகள் கலந்து கொண்டனர்

## சங்கிலி ஜெபமாலை

அக்டோபர் மாதம் ஜெபமாலை மாதமாகும். இந்த மாதத்தில், நமது திருச்சபையில் அனைத்து பங்குகளிலும் சிறப்பு திருப்பலி மற்றும் ஜெபமாலை நடத்தப்படுகின்றன. இந்த நிகழ்வை பங்குகளிலும் பத்து நாட்களுக்கு நினைவு கூர பக்த இயக்கங்களும் உறவியங்களும் முன்வந்தனர். 20 அக்டோபர் 2019 அன்று, அனைத்து பங்குகளிலும் உறவியம் அடிப்படையில் வீடு வீடாக சங்கிலி ஜெபமாலை நடத்தப்பட்டது.

# ஜெபமாலை பேரணி

ஒவ்வொரு ஆண்டும் மறைமாவட்ட அளவில் ஜெபமாலைப் பேரணியை மரியாவின் சேனை ஏற்பாடு செய்கிறது. அனைத்து பங்குகளிலிருந்து அதிகபட்ச பங்களிப்பை வழங்குவதற்காக, இந்த ஆண்டு தலா இரண்டு மறைவட்டங்கள் இணைந்து பேரணியை ஏற்பாடு செய்ய முடிவு செய்திருந்தது. அதன்படி பிலாங்கலை–குசைபுரம், படந்தாலுமூடு–நித்திரவிளை மற்றும் மஞ்சாலுமூடு–ஆறுகாணி என பேரணியை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது. இப்பேரணி மறைவட்ட அளவில் 27 அக்டோபர் 2019 அன்று நடைபெற்றது. மக்களின் பங்களிப்பு அதிகரித்துள்ளது. மேலும் அதிகமான மக்கள் தங்கள் சொந்த மறைவட்டங்களில் ஜெபமாலை பேரணியில் பங்கேற்க முடிந்தது. பேரணியில் சுமார் 1800 பேர் பங்கேற்றனர்.

# அருட்சகோதரி மரியா FCC நினைவு திருப்பலி

அக்டோபர் 2019 அன்று அழகியமண்டபத்தில் உள்ள சஞ்சோ மாகாண இல்லத்தில் அருட்சகோதரி மரியா FCC அவர்களின் நினைவு திருப்பலி நடத்தப்பட்டது. அருட்சகோதரி நமது மறைமாவட்டத்தின் முக்கிய மற்றும் பயனுள்ள நபர்களில் ஒருவர். அவர் திருச்சபையையும் நமது மறைமாவட்டத்தையும் மிகவும் நேசித்தார். அவர்களுடைய செயல்பாடுகள் அனைத்தும் மிஷன்பணி சார்ந்தவை. அவர் ஒரு ஆன்மீக நபராகவும் இருந்தார். அவர் அதிகாரிகளை மதித்தார். அவர்களுடைய நினைவு திருப்பலிக்கு ஆயர் அவர்கள் தலைமை ஏற்றார். பல அருட்தந்தையர்கள் அருட்சகோதரி மரியாவின் ஆத்மாவுக்காக ஜெபம் செய்தனர்.

# அருட்தந்தையர்களின் வருடாந்திர தியானம்

இந்த ஆண்டு அருட்தந்தையர்களின் வருடாந்திர தியானம் 2019 அக்டோபர் 20 முதல் 25 வரை சங்கமத்தில் நடைபெற்றது. அதிலாபாத்தின் ஆயர் மார் பிறின்ஸ் ஆன்றணி பனயங்காடன் அவர்கள் தியானம் வழிநடத்தினார். ஆயர் நற்செய்தி மற்றும் மிஷன் கருப்பொருள்களில் தலைப்புகளில் தியானம் நடத்தினார். மேலும், அக்டோபர் மாதம் மிஷன் பணி மாதமாக கொண்டாடப்பட்டது. அனைத்து மறைமாவட்ட அருட்தந்தையர்கள் தியானத்தில் கலந்து கொண்டு மற்றும் மிஷன் பணிகளுக்கான புதுப்பிக்கப்பட்ட உற்சாகத்தை அனுபவித்தனர்.

# Educational Ministry



# கல்விப் பணி

**கார்மல் மாதா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி கோவளம், கன்னியாகுமரி**

அக்டோபர் மாத செயல்பாடுகள் 1-10-2019 முதல் 4-10-19 வரை 11,12 வகுப்பு மாணவர்களுக்கு கல்வி சுற்றுலா ஏற்பாடு செய்யப்பட்டது. 43 மாணவர்களும், 5 ஆசிரியர்களும் சென்றனர். 3-10-19 அன்று காலாண்டு விடுமுறைக்குப்பின் திறக்கப்பட்டது. 3-10-19 அன்று மாணவர்களை இயற்கையோடு இணைவோம் என்ற கருத்தோடு தோட்டக்கலை பயிற்சி வகுப்பு ஆரம்பமானது. தோட்டக்கலை பயிற்சியாளர் திருமதி கிறிஸ்டினா அவர்கள் மாணவர்களுக்கு பயிற்சி அளித்தார்கள். எம் பள்ளி துணை முதல்வர் அருட்சகோதரி. டெய்சி மரியா அவர்கள் மாணவர்களுக்கு தோட்டக்கலை பயிற்சி வகுப்பினை தொடங்கி வைத்தார்கள். 4-10-19 அன்று மழலையர் பள்ளியில் அறிவியல் கண்காட்சி நடைபெற்றது. 5-10-19 அன்று மாணவர்களின் திறமைகளை வளர்க்கும் விதமாக 1 முதல் 12 ம் வகுப்பு வரை உள்ள மாணவர்களுக்கு வகுப்பு வாரியாக அறிவியல் கண்காட்சி நடைபெற்றது. 9-10-19 முதல் வாரத்தில் இரண்டு நாட்கள் 8-ம் வகுப்பு மாணவர்களுக்கு திருமதி கிறிஸ்டினா அவர்களால் தோட்டக்கலை பயிற்சி வகுப்புகள் நடைபெற்றது. 11-10-19 அன்று அறச்செயல்கள் என்ற தலைப்பில் 6 முதல் 12 வகுப்பு வரை மாணவர்களுக்கு கலந்தாய்வு நடைபெற்றது. 12-10-19 அன்று விளையாட்டு விழா நடைபெற்றது. CSI Deaf & Deaf School Kottaram, தாளாளர் திரு. ராஜ் அவர்கள் தலைமை வகித்து சிறப்புரையாற்றினார். மாணவர்களின் அணிவகுப்பினைத் தொடர்ந்து கலைநிகழ்ச்சிகளும் விளையாட்டுப் போட்டிகளும் நடைபெற்றன. 12-10 19 அன்று உணவுத்திருவிழா நடைபெற்றது. 12-10-19 அன்று மாலை 2.30 மணியளவில் எமது பள்ளி ஓட்டுநர்கள் மற்றும் ஆட்டோ ஓட்டுநர்களின் கூடுகை நடைபெற்றது. பள்ளி தாளாளர் அருட்சகோதரி மெர்சினா மற்றும் பள்ளி முதல்வர் அருட்சகோதரி அல்போன்ஸ் அவர்களும் கலந்துக் கொண்டனர். ஆசிரியை திருமதி மகேஷ்வரி அவர்கள் ஆட்டோ ஓட்டுநர்களுக்கு தேவையான கருத்துக்களையும் மாணவர்களின் நலனுக்குரிய விதிமுறைகளையும்

வழங்கினார்கள். 16–10–19 அன்று Teach Next Education என்ற அமைப்பிலிருந்து 6 ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. 24 10–19 அன்று 9 ம் வகுப்பு மாணவர்களுக்கு பெற்றோரை அன்பு செய்வோம், மதிப்போம் என்ற தலைப்பில் லதா அவர்களால் மாணவர்களுக்கு விளக்கவுரை அளிக்கப்பட்டது.

---

# புனித அல்போன்சா கலை மற்றும் அறிவியல் கல்லூரி

புனித அல்போன்சா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 3 நாள் தொழில் முனைவோர் பயிலரங்கம் இந்திய தொழில் முனைவோர் மேம்பாட்டு மையத்தின் நிதியுதவியுடன் நடைபெற்றது. இந்த பயிலரங்கில் கல்லூரி செயலர் மற்றும் தாளாளர் பேரருட்தந்தை ஆன்றணி ஜோஸ் தலைமை வகித்தார். முதல்வர் முனைவர் இசையாஸ் துவங்கி வைத்தார் சிறப்பு பேச்சளராக பேரருட்தந்தை டென்சி வர்க்கீஸ், பேரா. முனைவர். சுதர்லின் பால், பேரா. ஜாண் சாமுவேல், பேரா. பால் மணி நாகர்கோவில் மாவட்ட தொழில் மைய உதவி பொறியாளர் திரு. வரத கணேஷ், இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் நிதி ஆலோசகர் திரு. நாகேந்திர பிள்ளை, திருநெல்வேலி பிரான்சிஸ் பொறியியல் கல்லூரியின் தொழில் மைய இயக்குநர் முனைவர். லூர்டஸ் புபாலராயன் மற்றும் தக்கலை மறைமாவட்ட சீரோ மலபார் கத்தோலிக்க திருச்சபையின் குருகுல முதல்வர் பேரருட்தந்தை தாமஸ் பவ்வத்துப்பறம்பில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மாணவ மாணவியருக்கு சான்றிதழ்களை வழங்கினார். தொழில் முனைவோர் பயிலரங்க ஒருங்கிணைப்பாளர் பேரா. மதன் குமார் நன்றியுரையாற்றினர். இப்பயிலரங்க ஏற்பாடுகளை பேரா. ஜினி குமாரி, பேரா. அனிதா மற்றும் நாட்டு நலப் பணித்திட்டம் மாணவர்கள் செய்திருந்தனர்.

# அருட்சகோதரர்களிடமிருந்து...




அனைத்து சகோதரர்களும் நலமாக உள்ளனர்.

**விடுமுறை**

அக்டோபர் 5 ம் தேதி கேரளாவில் பல்வேறு குருமடங்களில் படித்துக் கொண்டிருக்கின்ற அனைத்து சகோதரர்களும் விடுமுறைக்கு தங்களது வீடுகளில் சென்றனர். அக்டோபர் 10 ம் தேதி அன்று சங்ஙானச்சேரி பேராலயத்தில் நடந்த மார் மாத்தியு காவுகாட் அவர்களின் 50 ம் நினைவுத் திருப்பலியில் அருட்சகோதரர்கள் அனைவரும் பங்கெடுத்தனர். திருப்பலிக்கு பிறகு அனைத்து அருட்தந்தையர்களையும் குறிப்பாக V.G அவர்களையும் இளங்குருமட அதிபரையும் அருட்சகோதரர்கள் சந்தித்தனர். பின்னர் அனைவரும் வீடுகளுக்குத் திரும்பினர்.

**களப்பயிற்சி**

வரும் அக்டோபர் 25 ம் தேதி களப்பயிற்சியின் முதல் பகுதி முடிகிறது. அடுத்த மாற்றம் இவ்வாறு உள்ளது. தற்போது ஆயர் இல்லத்தில் பணிபுரிந்த சகோ. டிவின் ராஜ் அவர்கள் மஞ்சாலுமூடு புனித குழந்தை தெரசாள் மறைவட்ட ஆலயத்திற்கு மாறுகிறார். மஞ்சாலுமூடு புனித குழந்தை தெரசாள் மறைவட்ட ஆலயத்தில் பணி செய்த சகோ. ஆல்பின் ஜோஸ் அவர்கள் சங்கமம் Pastoral Central க்கு மாறுகிறார். சங்கமம் Pastoral Central லில் இருந்த சகோ. ஷாஞ்சோ கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்திற்கு மாறிச் செல்கிறார். கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்திலிருந்த சகோ. லின்டோ இளங்குருமடத்திற்கு மாறிச் செல்கிறார். இளங்குருமடத்தில் பணி செய்து கொண்டிருந்த சகோ. அமண்டோ ஆயர் இல்லத்திற்கு மாறிச் சொல்கிறார். களப்பணி செய்யும் அனைத்து சகோதரர்களுக்கு நன்றியும் செல்லுமிடத்தில் நல்ல பணி செய்ய மனமார்ந்த வாழ்த்துக்களும். தற்போது குந்நோத்து குருமடத்தில் தனது இறுதி கட்ட பயிற்சி பெறும் தியாக்கோன் அவர்களுக்கு சகோதரர்களின் நல்வாழ்த்துக்கள்.

**சகோ. ஜோஸ் புரயிடத்து குந்நேல்**
**தலைவர்**




## சூசைப்பர் மறைவட்டம்

### பிலாங்கரை புனித லொரேட்டா மாதா ஆலயம்

மாதாவின் பிறப்பு திருவிழா 1-8-19 முதல் 8-8-19 வரை உறவியங்கள் வாயிலாக திருப்பலியும் ஜெபமாலையும் நடைபெற்றது. 8 ம் நாள் காலை திருப்பலியுடன் ஆரம்பித்து ஜெபமாலையும் ஜெபமாலைப் பவனியும் மாலை வரை நடைபெற்றது. அனைத்து வெள்ளிக்கிழமை களிலும் நற்கருணை ஆராதனை நடைபெற்று வருகிறது. வீடுகள் சந்தித்து மந்திரிப்பும் நடத்தப்பட்டு வருகிறது. 22-10-19 முதல் 31-10-19 வரை சிறப்பாக ஜெபமாலை நடைபெற்றது. 20-10 19 அன்று உறவிய அடிப்படையில் சங்கிலி ஜெபமாலை நடைபெற்றது. மிஷன் தினம் அன்று ஒரு மணி நேர ஆராதனை நடைபெற்றது.

### புனித சூசைப்பர் ஆலயம் - சூசைபுரம்

மாதாவின் பிறப்பு திருவிழாவினை கொண்டாடும் விதத்தில் 8 நாள் நோன்பு கொண்டாடப்பட்டது. 8 நாட்களும் சிறப்பு திருப்பலி ஜெபமாலையும் 8 நாள் நோன்பு ஜெபமும் சொல்லப்பட்டது. இறுதிநாளில் காலை முதல் மாலை வரை உறவியவாயிலாக 1007 ஜெபமாலையும் ஜெபமாலை பவனியும் நடைபெற்றது. 11-10-19 முழுநேர இரவு ஆராதனை நடைபெற்றது. 18-10-19 அன்று திருத்தொண்டு பணிகளுக்கான ஒரு நாள் ஆராதனை நடைபெற்றது. 18-10-19 முதல் 27-10-19 வரை சிறப்பு ஜெபமாலை நடைபெற்றது. எல்லா நாளும் திருப்பலிக்கு வந்த குழந்தைகளுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டது 26-10-19 அன்று தக்கலை கொமித்சியம் மரியாவின் சேனையின் சார்பில் நடைபெற்ற ஜெபமாலை பவனி சூசைபுரம் ஆலயத்தில் முடிவடைந்தது. அன்று அருட்தந்தை மிஜோ புத்தன்புரையில் அவர்கள் ஆசியுரையும் மறைமாவட்ட ஆவணக்காப்பாளர் பேருட்தந்தை சத்தியநேசன் அவர்கள் தலைமையுரையும் பேருட்தந்தை ஆன்றணிஜோஸ் அவர்களும் வாழ்த்துரையும் கூறினார்கள். ஜெபமாலையும் ஆராதனையும் நடைபெற்றது. மிஷன் ஞாயிறன்று மிஷன் லீக் மாணவர்கள் வீடுகள் தோறும் சென்று உதவிகளைப் பெற்றனர்.

**கிள்ளியூர் புனித தேவமாதா ஆலயம்**

30-8-2019 முதல் 8-9-19 வரை மிகவும் ஆடம்பரமாக திருவிழா நடைபெற்றது. 15 ம் தேதி பங்கு பேரவைக் கூட்டம் நடைபெற்றது. 29 ம் தேதி வின்செந்தியார்களுக்கான சிறப்புத் திருப்பலியும் காணிக்கைப் பவனியும் நடைபெற்றது. இறுதியாக இனிப்பு வழங்கி தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்தனர். 6-10-19 அன்று பங்குபேரவை கூட்டம் அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. 10-10-1019 முதல் 20-10-19 வரை அனைத்து உறவியங்களிலும் ஜெபமாலை நடைபெற்றது. 20-10-19 அன்று சிறப்பு சங்கிலி ஜெபமாலை நடைபெற்றது 27-10-19 அன்று மறைக்கல்வி மாணவர்களின் பெற்றோர்கள் கூட்டம் அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அனைத்து வெள்ளிக்கிழமையிலும் ஆராதனை நடைபெற்று வருகிறது

**தக்காளிவிளை திருக்குடும்ப ஆலயம்**

தக்காளி விளை - செப்டம்பர் 1 முதல் 8 வரை சிறப்பு ஜெபமாலையும் திருப்பலியும் நடைபெற்றது. 8 வது நாள் ஆடம்பரத் திருப்பலியும் 4 உறவியங்களில் ஜெபமாலையும் நடைபெற்றது. ஆலயத்திலிருந்து சகாய நகர் முதியோர் இல்லம் வரை ஜெபமாலை பவனியும் ஜெபமும் நடைபெற்றது. பங்குத்தந்தையும் மறைக்கல்வி மாணவர்களும் இணைந்து கேக் வெட்டி முதியோர்களுக்கு வழங்கி மாதா விழாவினை சிறப்பாக கொண்டாடினர். 10-10-19 முதல் 20-10-19 வரை ஜெபமாலையும் ஜெபமாலை பவனியும் மாலை வரை நடைபெற்றது. அனைத்து சனிக்கிழமையிலும் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் ஜெபமாலை நடைபெற்றது. 20-10-19 அன்று ஆலய வளர்ச்சிக்காக சிறப்பு பரிசு சீட்டுக் குலுக்கல் நடைபெற்றது. 27-10-19 அன்று அருட்தந்தை சுபின் தலைமையில் பங்குப்பேரவை கூட்டம் நடைபெற்றது. மறைமாவட்ட அருட்பணி பேரவைக்கு திரு. சி.சோனிக் ரீகன் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**பாலப்பள்ளம் கிறிஸ்து அரசர் ஆலயம்**

6-10-19 அன்று பங்கு பிரதிநிதி மன்ற கூட்டம் அருட்தந்தை ஜாண் பால் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. 13-10-19 அன்று கல்லூரியில் படிக்கும் இளையோர்களுக்கான சிறப்பு திருப்பலியும் மன்றாட்டும் இடம் பெற்றன. அன்றைய தினம் மறைமாவட்ட வெள்ளி விழா குறித்த பங்கு மக்களின் கருத்து கேட்பு கூட்டம் நடைபெற்றது அதில் ஒவ்வொரு இயக்கங்களின் சார்பில் கலந்தாய்வு நடைபெற்றது. 20 ம்

தேதி அருட்தந்தை ஜாண் பால் அவர்களின் பெயர்கொண்ட திருநாள் சிறப்பாக கொண்டாடப்பட்டது. காலை திருப்பலியும் சிறப்பு மன்றாட்டுகள் சொல்லப்பட்டது. தொடர்ந்து வாழ்த்துரைகள் கலைநிகழ்ச்சிகள் கேக் வெட்டுதல் போன்ற நிகழ்வுகள் நடைபெற்றது. சூசைபுரம் – தக்கலை பிளாங்காலை மறைவட்ட ஆலயங்களுக்கான மரியாயின் சேனை ஜெபமாலைப் பவனி பாலப்பள்ளம் பங்கில் துவங்கி சூசைபுரம் சென்றடைந்தது. மறைமாவட்ட அருட்பணி பேரவைக்கு முனைவர் ஜாக்குலின் அவர்கள் தேர்வு செய்யப்பட்டார். 1–11–19 அன்று பிரதிமன்ற கூட்டம் நடைபெற்றது. 7–9–2019 சங்கிலி ஜெபமாலை உறவிய அடிப்படையில் நடைபெற்று மாலை 6.30 மணிக்கு திருப்பலியை தொடர்ந்து ஜெபமாலை பவனியும் நடைபெற்றது. 8–9–2019 இளைஞர் இயக்கம் சார்பில் உணவுத்திருவிழா நடைபெற்றது. அவர்களுக்கு வினாடி வினா போட்டியும் நடைபெற்றது. கடந்த 2 வருடமாக வெளி–யிட்டுள்ள அருள்தூதுலிருந்தும், சீனாய் புத்தகத்திலிருந்தும், அன்னை மரியாவைப்பற்றிய கேள்விகள் கேட்கப்பட்டது. 11–9–2019 அன்று ஓணச்சிறப்புக் கொண்டாட்டமும் ஓணப்போட்டிகளும் நடைபெற்றது. 22–9–19 அன்று பங்கின் வாகன ஓட்டிகளுக்கான சிறப்பு திருப்பலியும் நடைபெற்றது. 22–9–19 அன்று பங்கின் சார்பில் புனித வின்செந்திய தினம் கொண்டாடப்பட்டது. அவர்களுக்கு 27 ம் தேதி ஒப்புரவு வழிபாடு நடைபெற்றது. 29 ம் தேதி உறுப்பினர்கள் திருப்பலியின் போது மெழுகுதிரி ஏந்தி உறுதிமொழி புதுப்பித்துக் கொண்டனர்.

## மஞ்சாலுமூடு மறைவட்டம்

**களியல் புனித மரியன்னை ஆலயம்**

களியல் புனித மரியன்னை ஆலய திருவிழா 30–08–2019 முதல் 08–09–2019 வரை நடைப்பெற்றது. 30–08–2019 அன்று பங்குதந்தை டினு கோட்டக்கபறம்பில் அவர்கள் கொடியேற்றி துவங்கி வைத்தார். தினமும் மாலை 5 மணிக்கு ஜெபமாலை, நவநாள் தொடர்ந்து திருப்பலி நடைபெற்றது. சகோதரர் டேவிட் மற்றும் குழுவினர் தலைமையில் 3 நாள் நற்செய்தி பெருவிழா நடைபெற்றது. 3–09–2019 அன்று இறந்தோருக்காக சிறப்பு ஜெபம் நடைபெற்றது. 4–09–2019 அன்று காலை இலத்தீன்முறையில் திருப்பலி நிறைவேற்றப்பட்டது. 6–09–2019 அன்று மறைக்கல்வி மற்றும் பக்த இயக்கங்களின் ஆண்டுவிழா பொதுக்கூட்டம் நடைபெற்றது. 7–09–2019 அன்று ஆடம்பர தேர்பவனி நடைப்பெற்றது. 8–09–2019 அன்று ஆயர் தலைமையில் திருப்பலி நிறைவேற்றப்பட்டு திருவருட்சாதனங்களும் வழங்கப்பட்டன.

# மறைமாவட்டத் திருத்தொண்டு பணிக்குழு

21–9–19 சனிக்கிழமை மாலை 3 மணிக்கு படந்தாலுமூடு ஆலய வளாகத்தில் வைத்து குருகுல முதல்வர் பேரருட்தந்தை தோமஸ் பவ்வத்துப்பறம்பில் அடிகளார் தலைமையில் நடைபெற்ற கூட்டத்திற்கு பேரருட்தந்தை ஆன்றணி ஜோஸ் அடிகளார் முன்னிலை வகித்தார். புனித வின்செட் தே பவுல் சங்கம், மரியாயின் சேனை இயக்கம், மறைமாவட்ட பொதுநிலையினர் பணிக்குழு ஆகிய இயக்கங்களின் பிரதிநிதிகள் கலந்துக் கொண்டனர். மறைபரப்பு பணியின் தேவை , மறைமாவட்ட விரிவாக்கம் மறைபரப்புப் பணியாளர்கள் தெரிவு செய்தல் போன்ற கருத்துக்களின் அடிப்படையில் விவாதங்கள் நடைபெற்றன. அக்டோபர் மாதம் திருத்தொண்டு மாதமாக கடைபிடிக்க சீரோ மலபார் திருச்சபை முடிவு செய்திருப்பதால் நமது மறைமாவட்டத்திலும் பல்வேறு செயல்கள் நடைமுறைப்படுத்த தீர்மானிக்கப்பட்டது. அதன் முன்னோட்டமாக அனைத்து வீடுகளிலும் சிறப்பு திருத்தொண்டு ஜெபம் சொல்ல அட்டை தயாரித்து வழங்குவது எனவும் ஆலோசிக்கப்பட்டது. திருத்தொண்டு பணிக்குழு செயலராக திரு எட்வின்சன் பாலப்பள்ளம் தெரிவு செய்யப்பட்டார். அடுத்த கூட்டம் அக்டோபர் 5 ம் தேதி நடத்தவும் வருகை புரிந்தோர் தலா ஒருவரைக்கூட அக்கூட்டத்திற்கு அழைத்து வர வேண்டும், மறைபரப்புப் பணியின் தேவையை பிறர் அறியச் செய்ய வேண்டும், தன்னார்வ பணியாளர்களுக்கு உணவு, தங்குமிடம், பயணப்படி வழங்கலாம் போன்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. சுமார் 20 நபர்கள் பங்கெடுத்தனர்.

**இரண்டாவது கூட்டம்**

5–10–19 சனிக்கிழமை மதியம் 3 மணிக்கு மறைமாவட்டத் திருத்தொண்டு பணிக்குழு கூட்டம் பேரருட்தந்தை தோமஸ் பவ்வத்துப்பறம்பில் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பேரருட்தந்தை ஆன்றணி ஜோஸ் அடிகளார் முன்னிலை வகித்தார். புதிய திருத்தொண்டு நிலையங்களில் பணியாற்றும் அருட்தந்தை பீட்டர் கிழக்கேல் அருட்தந்தை தாமஸ் மூலச்சாலி ஆகியோரோடு அருட்தந்தை மிஜோ, அருட்தந்தை வினு டி ஜோஸப் ஆகியோரும் பங்கெடுத்தனர். அருட்தந்தை பீட்டர் கிழக்கேல் அவர்கள் திருத்தொண்டு நிலையங்களில் நடைபெறும் நிகழ்வுகள் குறித்து விளக்கிக்கூறினார். அன்றைய கூட்டத்தில் சுமார் 20 நபர்கள் பங்கெடுத்தனர். மறைவட்ட அளவில் பொறுப்பாளர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

ஆறுகாணி மறைவட்டம் – திரு. ஜோஸ் பெருமன, ஆறுகாணி

,திரு. எபிதாமஸ், நெட்டா. மஞ்சாலுமூடு மறைவட்டம் – திரு. சவுந்தர ராஜ், முழுக்கோடு, திரு. வில்சன், மூக்கூட்டுக்கல் களியல் மறைவட்டம் – திரு. மணிவண்ணன், மாறப்பாடி, திரு. அகஸ்டின், களியல் படந்தாலுமூடு மறைவட்டம்– திரு. மரியதாஸ், குழித்துறை, திரு. தாமோதரன், தெற்றியோடு நித்திரவிளை மறைவட்டம் – திரு. ஜாண் வயலின்கரை, திரு. றாபி, வாறுதட்டு சூசைபுரம் மறைவட்டம் – திரு.ஐய்யாத்துரை, பாலப்பள்ளம், திரு. தாமஸ், பன்னீர் செல்வம், சூசைபுரம் தக்கலை– பிலாங்காலை மறைவட்டம் – திருமதி மெரின்தேவிகா பரைக்கோடு, திருமதி, ஹேமா, பிலாங்காலை

அடுத்த கட்டம் நவம்பர் 15 அன்று நடத்தப்படும் என்றும் கூட்டத்தில் எடுக்கப்பட்டுள்ள முடிவுகள் குறித்து அருட்தந்தையர்கள் கூடுகையில் அறிவித்த பின்னர் பங்களவில் திருத்தொண்டுப் பணியாளர்களை நியமித்து மிசன் பகுதியில் வசிக்கும் நமது மறைமாவட்ட மக்கள் அல்லது உறவினர்களை கண்டறிந்து பணி செய்ய ஆவனச் செய்வது எனவும், தன்னார்வ பணியாளர்கள் மற்றும் பரிந்துரை குழு உறுப்பினர்களை நியமிப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது. ஜெபக்குழு ஏற்படுத்துதல் தன்னார்வ பணியாளர்களை நியமித்தல் திருத்தொண்டு நிலையங்களில் தனிநபரோ குடும்பமாகவோ பணியாற்றுபவர்களை தெரிவு செய்தல் போன்ற முடிவுகள் எடுக்கப்பட்டன

**இவண், செயலர்**

**மு. எட்வின்சன்**

# மஞ்சாலுமூடு அருட்தந்தை இல்லம் அர்ச்சிப்பு

புனித குழந்தை தெரசாள் மறைவட்ட ஆலய அருட்தந்தையர்களுக்காக ஒரு அழகான இல்லம் கட்டப்பட்டது. 27 அக்டோபர் 2019 அன்று அர்ச்சிக்கப்பட்டது. இது பேரருட்தந்தை அகஸ்டின் தலோடில் மற்றும் பங்கு மக்களின் கடின உழைப்பின் விளைவாகும். பேரருட்தந்தை அகஸ்டின் தலோடில் திருச்சபையை ஆன்மீக ரீதியாகவும் பொருள் ரீதியாகவும் வளர்க்க மிகவும் கடினமாக உழைத்து வருகிறார். மஞ்சாலுமூடு ஆலயத்தின் முகம் முற்றிலும் மாறி–விட்டது. அவருக்கும் ஆலய உறுப்பினர்களுக்கும் அவர்களின் கடின உழைப்பு மற்றும் அர்ப்பணிப்புக்கும் நான் மனமார்ந்த நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். 27 அக்டோபர் 2019 அன்று அருட்தந்தை அகஸ்டின் தலோடிலின் 60 வது பிறந்த நாள். நான் அவருக்கு கடவுளின் ஆசீர்வாதங்களை தெரிவிக்கிறேன்.

# செங்கோட்டை செய்திகள்

**தன்னார்வ குழுக்களின் கூடுகை**

6-10-19 அன்று பார்டரில் வைத்து தன்னார்வ குழுக்களின் கூடுகையானது நடைபெற்றது. அருட்தந்தை ஜிஜி அவர்களின் தலைமையில் அனைத்து கன்னியர் இல்லத்தலைவிகள் மற்றும் இறைபணியில் ஈடுபாடுள்ள இறைமக்களும் இதில் பங்கெடுத்து தங்களது செயல்பாடுகளை பங்கிட்டனர்.

**திருப்பணியாளர்களின் கூடுகை மற்றும் மறைக்கல்வி மாணவர்களுக்கான விவிலிய வினாடி வினா போட்டி**

7-10-19 அன்று வாஞ்சி ஆலயத்தில் வைத்து மதியம் 2 மணியளவில் மாணவர்களுக்கான விவிலிய வினாடி வினா போட்டியானது நடைபெற்றது. அருட்தந்தை லிஜோ தெக்கேல் அவர்கள் இதை பொறுப்பேற்று நடத்தினார்.16 பேர் அடங்கிய 8 குழுக்கள் ( ஒரு குழுவில் 2 பேர் வீதம்) இப்போட்டியில் பங்கெடுத்தனர். இப்போட்டியில் புளியரை பங்கு மாணவர்கள் முதல் இடத்தையும் சுந்தரபாண்டியபுரம் மாணவர்கள் 2- வது இடத்தையும் புளியரை பங்கு மாணவிகள் பெற்றனர். அதனைத் தொடர்ந்து திருப்பணியாளர்களுக்கான வகுப்புகளை அருட்தந்தை ஜிஜி அவர்கள் நடத்தினார். இறுதியில் போட்டியில் பரிசு பெற்ற மாணவர்களுக்கும் பங்கெடுத்த மாணவர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன.

**மாதாந்திர தியானம்**

அக்டோபர் மாத தியானமானது 12 ம் தேதி வாஞ்சி ஆலயத்தில் வைத்து நடைபெற்றது. காலை 9.30 மணியளவில் ஜெபமாலையுடன் ஆரம்பமானது. புதுவாழ்வு தியான இல்லத்திலிருந்து சகோதரர் ஆன்றணி அவர்கள் தியான உரை வழங்கினர். தொடர்ந்து அருட்தந்தை ஜஸ்டின் சுதீஷ் அவர்கள் திருப்பலி நிறைவேற்றினார். இறைமக்கள் ஏராளமானோர் இறை ஆசீர் பெற்றுச்சென்றனர்.

**மாதாந்திர கூடுகை**

அருட்பணியாளர்கள் மற்றும் அருட்கன்னியர்களின் மாதாந்திர கூடுகையானது 15-10-19 அன்று அன்பு இல்லத்தில் வைத்து நடைபெற்றது. தக்கலை மறைமாவட்டத்தின் குருகுல முதல்வர் பேரருட்தந்தை தோமஸ் பவ்வத்துப்பறம்பில் சிறப்பு விருந்தினராக வந்து கூடுகையை சிறப்பித்தார். ஆராதனை ஒப்புரவு அருட்சாதனத்தைத் தொடர்ந்து

கூடுகையானது நடத்தப்பட்டது. கூடுகையில் பக்த இயக்க செயல்பாடுகள் விவாதிக்கப்பட்டது. பேரருட்தந்தை தோமஸ் பவ்வத்துப்பறம்பில் அவர்கள் மறைத்தொண்டு மாதத்தின் சிறப்புகள் மற்றும் சிறப்பு பணிகளை எடுத்துக் கூறினார். தக்கலை மறைமாவட்டத்தின் Pastral council லில் பங்கெடுக்க செங்கோட்டை மறைத்தள சார்பாக அருட்தந்தை றோணி MCBS, அருட்கோதிரி ஆன்மரியா CMC தேர்ந்தெடுக்கப்பட்டனர். மற்றும் இறைமக்கள் பிரதிநிதியாக 2 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அன்பு இல்லத்தில் பயிற்சிக்காக வந்திருந்த அருட்சகோதரர்கள் தங்களை அறிமுகப்படுத்தி அவர்களின் மிஷன் அனுபத்தையும் பங்கிட்டனர். அக்டோபர் மாதத்தில் ஜெபமாலை திருப்பவனி 27 ம் தேதி நடத்தப்பட தீர்மானிக்கப்பட்டது. இறுதியில் அருட்தந்தை ராஜேஷ் MCBS அவர்கள் அனைவருக்கும் நன்றி கூறினார். அன்பு விருந்துடன் கூடுகையானது நிறைவுற்றது.

**அருட்தந்தை. தோமஸ் தக்கலை**
**ஒருங்கிணைப்பாளர்**

---

# ஆத் லிமினா சந்திப்பு

நமது சீரோ-மலபார் திருச்சபைக்கு இது ஒரு ஆசிர்வதிக்கப்பட்ட தருணம் இது. 2019 அக்டோபர் 3 ஆம் தேதி செயின்ட் பீட்டரின் கல்லறையில் ஆடம்பரமான திருப்பலியுடன் இந்த பயணம் தொடங்கியது. 52 ஆயர்களும் இந்த நற்கருணை கொண்டாட்டத்தில் பங்கேற்றனர். அதே நாளில் காலை 10.30 மணிக்கு, திருத்தந்தை பிரான்சிஸ் அனைத்து ஆயர்களையும் சந்தித்தார். அனைத்து ஆயர்களுக்கும் தங்கள் மறைமாவட்டம் மற்றும் செயல்பாடுகள் தொடர்பான அனைத்தையும் பகிர்ந்து கொள்ள வாய்ப்புகள் வழங்கப்பட்டன. திருத்தந்தை துல்லியமாக மிகுந்த அன்புடன் பதிலளித்தார். நமது திருச்சபையில் மேற்கொள்ளப்பட்டு வரும் இறைப்பணிகளைப் பாராட்டினார். திருச்சபையின் அனைத்து உறுப்பினர்களுக்கும் அவர் தனது ஆசீர்வாதத்தை வழங்கினார். அடுத்தடுத்த நாட்களில், ஆயர்கள் பல்வேறு இடங்களையும், திருச்சபைகளையும் பார்வையிட்டனர். நமது திருச்சபை தொடர்பான பல்வேறு பிரச்சினைகள் குறித்து ஆயர்கள் அந்தந்த அதிகாரிகளுடன் பதிலளித்தனர். 12 அக்டோபர் 2019 அன்று, அனைத்து ஆயர்கள் முன்னிலையில் சீரோ-மலபார் புரோகுரா திறக்கப்பட்டது. அக்டோபர் 13 2019 அன்று முத்திபேறுபெற்ற மரியம் திரேசியா அவர்களுக்கு புனிதர் பட்டம் வழங்கப்பட்டது. அனைத்து சிரோ-மலபார் ஆயர்களும் இதில் பங்கேற்றனர்.

# BISHOP'S ENGAGEMENTS NOVEMBER 2019

| DAT | DAY | TIME | EVENTS |
|---|---|---|---|
| 1 | Fri | 09.00 am | Sangamam: Eparchial Pastoral Council |
| 2 | Sat | 09.00 am | Pilankalai: First Profession of FCC Sisters |
| 3 | sun | 02.30 pm | Kazhuvanthittai: Consecration of New Church |
| 4 | Mon | 10.00 am | Madurai: TNBC Health Commission Core Committee Meeting |
| 5 | Tue | | Bishop's House |
| 6 | Wed | 09.00 am | Bishop's House: Eparchial Curia Meeting |
| 7 | Thu | 09 - 04 | Bishop's House: Meeting with Priests |
| 8 | Fri | 09 - 04 | Bishop's House: Meeting with Priests |
| 9 | Sat | 11.00 am | Anayadi: Jubilee Holy Qurbana |
| 10 | sun | 03.00 pm | Padanthalumoodu: 23rd Diocesan Day Celebration and Silver Jubilee Inauguration |
| 11-16 | Mon-Sat | | North-East Visit |
| | Sun | 07.00 am | Thakkalivilai: Holy Qurbana and Mission League Rally >>Trichy |
| 18-19 | Mon-Tue | | Trichy: TNBC Health Commission Training of Trainee (TOT) Programme |
| 20 | Wed | 09.00 am | Sangamam: Eparchial Priests' Conference |
| 21 | Thu | 06.00 pm | Mukkuttukal: Visit to Minor Seminary |
| 22 | Fri | 10.00 am | Padanthalumoodu: Marriage Holy Qurbana |

| | | | |
|---|---|---|---|
| 23 | Sat | 02.00 pm | Padanthalumoodu: Sainthood Celebration of Sr. Mariam Theresia |
| 24 | Sun | 08.00 am | Palapallam: Feast Day Holy Qurbana and Parish Level Silver Jubilee Inauguration |
| | | 07.00 pm | Thuckalay: Gathering at CMC Provincial House |
| 25 | Mon | | Mission Visit \| Shenkottai Mission Gathering |
| 26 | Tue | 12.00 pm | Changanacherry: Inter Eparchial Meeting |
| 27 | Wed | | Prayer day |
| 28 | Thu | | Bishop's House |
| 29-30 | Fri-Sat | | Kalluvilai: Eparchial Bible Convention |

## BIRTHDAYS OF REV FATHERS

**BIRTH DAYS - NOVEMBER**

| | |
|---|---|
| Fr. Abilash Xavier Raj S. | 16 |
| Fr. Joseph Ottalankal MST | 17 |
| Fr. John Thekkel | 20 |
| Fr. Joshy Thadiyananickal CMI | 27 |

## FEASTDAYS OF REV FATHERS

**FEAST DAYS - NOVEMBER**

| | |
|---|---|
| Fr. Christudas M. | 24 |

2019 OCTOBER 31
APJM ANNUAL DAY
SOOSAIPURAM





2019 OCT 31
SR. MARIA FCC
REQUIEM MASS





2019 OCTOBER 2
ST.PAUL CHURCH FEAST DAY
CELEBRATION,THETTIYODE





## 2019 OCTOBER 27
## MARIYAYIN SENAI
## ROSARY RALLY







## 2019 OCTOBER 2
## ST. VINCENT DE PAUL
## HOSPITAL CLEANING CAMP



**For Private Circulation Only**

IRAI ARUL, The Official Organ of the Diocese of Thuckalay
Published by: Fr. Joseph Santhosh for the Diocese of Thuckalay,
Bishop's House, Post Box No. 12, Thuckalay - 629175
Printed at: Pulari Offset Press, Thuckalay 629175, Ph. 04651-252570